O31·2 11, N27.
N88 . 63·4
191720

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு - ௬௩ ★ பரல் - ௪
திருவள்ளுவர் ஆண்டு-௨௦௧௯ கார்த்திகை
திசம்பர் 1988

'செந்தமிழ்ச் செல்வி''
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் :

தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் கு. பரமசிவன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் :

இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி.லிட்.,

உள்ளுறை

	பக்கம்
ஆலும் பனையும்	கயக
குறள் கூறும் இறைநெறி-3	கஉ௫
வைகறை விடியலில் வரலாற்று அழுந்தூர்	கருசு
பதிப்பாசிரியர்களும் கடமைகளும்	கசக
கரிகாலனும் அலெக்சாந்தரும்	கருரு
செய்திகள்	கருஅ
மதிப்புரை	கரு௯

செந்தமிழ்ச்

செல்வி

தி. வ. உ௦கக-கார்த்திகை

திசம்பர்—1988

சிலம்பு-௬௩: பரல்-௪

ஆலும் பனையும்

மரங்களில் பலவகையுண்டு. அவற்றுள் ஆலமரத்துக்கும் பனைமரத்துக்கும் பல்வகை வேறுபாடுகளுள்ளன. ஆலமரம் வளர வளரப் பரந்து விரிந்து வளரும், நாளாக நாளாக அதன் விழுதுகள் மரத்திலிருந்து கீழே தொங்கித் தரையைத் தொட்டு, தரைக்குள் இறங்கி ஆழங்கால்பட்டு நன்கு வேரூன்றி நிற்கும். வளர்ந்து பெரிதான ஆலமரம் தானாக நிற்கிறதா அல்லது அதன் விழுதுகளால் நிற்கிறதா என்று கண்டுணர முடியாது. ஆலமரம் பரந்து விரிந்து நன் நிழலின் கீழ்ப் பல குடும்பங்களை தங்க இடம் கொடுக்கும். அவற்றுக்கு நிழல் தந்து வெயிலோனின் வெம்மையிலிருந்து பாதுகாக்கும். மேலும் நூற்றுக்கணக்கான பறவைகள் ஆலமரத்தில் கூடு கட்டி வாழும். ஆலமரம் அனைவரையும் தாங்கி, நிழல் கொடுத்துக் காப்பாற்றும்.

பனைமரமும் ஒருவகை மரம்தான். பயன்தரும் மரம் தான். பனைஓலை கூரைவேயப் பயன்படும். நுங்கு வெயில் காலத்தில் உண்ண உதவும். பனங்கிழங்கு தின்னச்சுவை தரும். பனைமரமே துண்டுதுண்டாக அறுத்து எடுத்தால் வீடுகட்ட உத்தரமாக அமையும். பனையும் பயன் தரும் மரம்தான். ஆனால், ஆலும் பனையும் ஒன்றாகிவிட முடியாது. பனைமரத்தின் நிழலில் ஒருவர் நிற்பதே கடினம். ஒதுங்கி ஒதுங்கி நிழல் விழும் இடம் நோக்கி நகர்ந்து கொண்டே யிருக்க வேண்டும். ஒன்றிரண்டு பறவையும் கூடுகட்டப் பனை இடம் தரும். பனையிலும் சில அதிசயப் பனைகள் உண்டு. கீழே ஒரு பனையாக முளைத்துத் தலைப்பக்கத்தில் நான்கைந்து கிளைவிட்டு நான்கைந்து மரங்கள் போல் வளர்ந்திருக்கும் இவற்றை அதிசயப்பனைகள் என்று கூறுவதுண்டு,

அதை ஒற்றைப்பனை என்று கூறுவதா அல்லது நான்கைந்து பனைமரங்கள் என்று கூறுவதா என்ற ஐயப்பாடே எழுந்து விடும்.

அண்மைக்காலத்தில் தமிழக அரசுத்துறையின் பல்வேறு இயக்குநரகங்கள் தலையை மட்டுமே கணக்கிட்டு எண்ணி நான்கைந்து தலைகொண்ட பனைமரமா அது நான்கைந்து பனைமரங்கள்தாம். ஆலமரம் எவ்வளவுதான் வளர்ந்து பெரிதாக இருந்தாலும் அதுவும் ஒரு மரம்தான். எங்களைப் பொறுத்தவரை எல்லா மரங்களும் ஒரே மரங்களே. பனை மரம் நேற்றுத்தான் முளைத்தது, அதிலும் அடிமரம் ஒன்றும் தலைகள் பலவுமாக உள்ள மரத்தைத் தலையைக் கொண்டு கணக்கிட்டு ஐந்துமரங்கள், ஆறு மரங்கள்—இவை தனித்தனி மரங்களே, என்று கணக்கிடுகிறீர்களே என்று கேட்டால் 'நாங்கள் தலையைக்கொண்டுதான் கணக்கிடுவோம். அடி மரத்தைப் பற்றிக் கவலையில்லை' என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு 'வீட்டுக்கு ஒரு குழந்தை!' 'வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்!' 'நாமிருவர் நமக்கு ஒருவர்' என்ற அரசுப் பழமொழிகளே இன்றைய தமிழ் மறையாகி விட்டன. ஒன்றுக்கு மேல் அவர்களால் எண்ணவே முடியவில்லை. ஆலமரம் தன் விழுதுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக வெட்டி விட்டு விட்டு ''கூட்டுக்குடும்பம்'' இனி உதவாது. ஓ! விழுதுகளே! நீங்கள் இனி என்னைத் தாங்க வேண்டாம். நீங்களே தனித்து நின்று தலையெடுங்கள். தலைகளை மட்டுமே கொண்டு கணக்கெடுப்பவர்கள் காலம் வந்துவிட்டது.'' என்று கூறும் நிலை வந்துவிட்டது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒரு கூட்டுப்பங்கு நிறுவனமாக 1920 இல் தோன்றியது. 500க்கு மேற்பட்ட பங்காளிகளால் உருவானது. நெல்லையில் தோன்றி சென்னையில் வேர் விட்டு இன்று வேறு சில ஊர்களிலும் விழுதுவிட்டுக் காலூன்றி நிற்கும் ஆலமரம். தொடங்கும் போதே பதிப்புத் துறையில் கிடைக்கும் இலாபத்தில் பாதி அறத்திற்கென்று ஒதுக்கிவைத்து அதன் வழியாக மறைமலையடிகள் நூல் நிலையம், சிவஞான முனிவர் நூல்நிலையம், குமரகுருபரர் குழந்தைப்பள்ளி, நீலாம்பிகையார் தட்டச்சுப்பள்ளி என்று பல்வேறு அற நிறுவனங்களை நடத்தி வருவது கழகம்.

தொடக்கமுதலே தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும் சைவசமய நூல்களையும் வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்ட கழகம் காலவளர்ச்சிக் கேற்பத் தமிழில் சட்டநூல்கள், மருத்துவநூல்கள், அறிவியல் நூல்கள், என்று பலவகையான நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு ஊக்கமும் ஆக்கமும் தேடி வந்துள்ளது. குழந்தைகளுக்கு நல்ல நூல்களை வெளியிட வேண்டுமென்ற நோக்கத்துடன் 68 ஆண்டுக் காலத்தில் 400க்கு மேற்பட்ட சிறுவர்க்கான நூல்களை வெளியிட்டுப் பெருஞ்சாதனையே படைத்துள்ளது. கழகம் இத்தனை துறைகளில் பாடுபட்டு வந்ததற்குக் காரணம் தொடக்கமுதல் அயராது உழைத்து வந்த மேனாள் கழக ஆட்சியாளர் தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள்தாம். அவர்கள் பணியைக் கருத்தில் கொண்டே இந்தியப் பேரரசும் 'பத்மஸ்ரீ' என்ற விருதை அவர்கட்கு வழங்கியது. இந்த விருதினை எந்தப் பதிப்பாளரும் இவருக்கு முன்னோ பின்னோ இந்தியா முழுவதிலுமே வாங்கியதில்லை.

191722 031-311, N88.624

இவ்வளவு பெருமைமிகு வரலாற்றையுடைய ஆலமரத்தின் சிறப்பு இன்றுள்ள கல்வித்துறை இயக்குநர்களுக்குத் தெரியாத நிலையில் உள்ளது. கழகம் பயனுள்ள நூல்களை மட்டுமே பதித்து வருகின்றது. சங்க இலக்கியங்களையும் தொல்காப்பிய முதலான இலக்கண நூல்களையும் கழகம் முறையாகப் பதிப்பித்தது. இன்று வாங்குவாரில்லாமையால் இவற்றை மீண்டும் பதிப்பிக்க முடியாத சூழல் உள்ளது. இவ்வாறு பழம்பெரும் இலக்கியங்களை மட்டுமே அச்சிட்டு வந்த உ. வே. சா, குடும்பம், வை. மு. கோ. குடும்பம் போன்றவை பதிப்புத் தொழிலையே கைவிட்டு விட்டன. காலத்துக்கேற்ற நூல்களையும் கழகம் வெளியிட்டு வருவதால் ஓரளவு காலூன்றி நிற்கிறது. மீண்டும் மீண்டும் இலக்கிய, இலக்கண, சமய நூல்களை வெளியிட்டால் வாங்குவாரில்லை. கழகம் தனக்கென்ற ஒரு நூல் வெளியீட்டுக் கொள்கையை வகுத்துள்ளதால், இன்று நிரம்ப விற்பனையாகும் நாவல்கள், சமையற்கலை, சோதிடம், வைத்திய நூல்களை வெளியிடமுடியாததால், ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே இயங்க வேண்டியுள்ளது.

கழகம் தொடர்ந்து பணியாற்ற தமிழக அரசு ஆதரவு தேவை. கழகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிகின்றனர். கழகம் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களை நிலையாகக் காக்க வேண்டிய சூழ்நிலை. தமிழகத்தில் கழகம் மட்டுமே தனியொருவரின் உடைமை இல்லாத பதிப்பு நிறுவனம். 500க்கு மேற்பட்ட பங்காளி

களால் நடத்தப்பெறுவது. தன்னுடைய இலாபத்தில் பாதித்தொகையை அறநிறுவனங்களுக்காக ஒதுக்கிவைப்பது தனிப்பட்டவர்களின் இலாப நோக்குடன் செயல்படக் கூடாது என்பதற்காகவே தொடக்க முதல் கழகச்சட்ட விதிகளுள் ஒன்றாக எவ்வளவு இலாபம் கிடைப்பினும் 6% விழுக்காட்டிற்கு மேல் பங்கூதியம் (Dividend) பங்காளிகட்குக் கொடுக்கக்கூடாது என்று கட்டுப்பாட்டைத் தனக்குத்தானே வகுத்துக்கொண்ட நிறுவனம். சுருங்கக்கூறின் பதிப்புத் தொழிலையே 68 ஆண்டுகளாகத் தொண்டாகச் செய்துவரும் தமிழ்நாட்டின் ஒரே கூட்டுப்பங்கு நிறுவனம் (Public Limited Company) கழகமாகும். இதைத் தமிழக அரசுக் கல்வித் துறையினர் உணர்ந்து கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுகிறோம்.

மறை: ''பகைவரால் எய்யப்படுகின்ற அம்புகளும் எறியப்படுகின்ற ஈட்டிகளும் உடம்பிற் பாயாவாறு உடல் முழுதும் தழுவிக் கிடந்து காக்கும் கவசத்தை ''மெய்ம்மறை'' என்று வழங்குவது தமிழ் மரபு. மெய்யாகிய உடம்பினை மறைத்துக் காப்பதனால் மெய்ம்மறை என்ற பெயர் பெற்றது. கோட்டைச் சுவர்களாகிய அரண்கள் பகைவர் எய்கின்ற படைக் கலங்கள் வந்து பாயாதவாறு தடுத்துக் காத்தலால் 'மறை' என்ற பெயர் பெறும். அரண்போல் நின்று காத்து உதவும் நூல் 'ஆரணம்' என்று கூறப் பெறும். மறை, வேதம் என்று பெயர் பெறும் நூல்கள் ஆரணம் என்றும் பெயர் பெறும். அருமை ஆகிய அரணம் என்பதே 'ஆரணம்' என்று ஆயிற்று, ஆருயிர் என்பது போல. ஆகவே ஆரணம் மறை என்பன ஒரு பொருள் குறித்த காரணச் சொற்களாகும். தீய நினைவுகளும், தீய சொற்களும், தீய செயல்களும் ஆகிய படைக் கலங்கள் வந்து பாய்ந்து கொல்லாதவாறு தடுத்து நின்று மறைத்து உயிரைக் காப்பதே மறை'' என்க.

(பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள். 1-2.)

குறள் கூறும் இறைநெறி—3

''ஓர்த்து உள்ளம் உள்ளது உணர்தல்''

பேராசிரியர். மா. சண்முக சுப்பிரமணியம், சென்னை

(முன் இதழ் க0௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்:

எப்பொருள் எத்தன்மையதாகத் தோன்றினாலும், அத்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல், அப்பொருளில் அமைந்து அடங்கியுள்ள இறைமை என்ற ''மெய்ப்பொருளை'' உணர்ந்து காண்பதே உண்மையான அறிவாகும். என்று கூறும் குறளின் விளக்கத்தைக் கண்டோம்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355)

ஆனால், எல்லாப்பொருள்களிலும் அடங்கி நிற்கும் மெய்ப்பொருளை நாம் எளிதில் காண்பதில்லை. காரணம், பொருள்களின் தோற்றத்தில் மயங்கி, அத்தோற்றத்தையே உண்மை என நாம் நம்பி விடுகின்றோம். மெய்ப்பொருள் அல்லாத வெறும் தோற்றத்தை மெய்ப்பொருள் என்று நாம் நினைக்கின்றோம்.

இவ்வாறு நம் மனம் மயங்குவதை, நம் மனத்திற்கு ஏற்படும் மயக்கத்தை ''மருள்'' என்கிறார் வள்ளுவர்.

மெய்ப்பொருள் அல்லாத தோற்றங்களை மெய்ப் பொருள் என்று எண்ணும் மயக்கத்தால் துன்பப்பிறவி உண்டாகின்றது என்கிறது குறள்:

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. (351)

எனவே, பொருளல்லவற்றைப் பொருளென்று உணர்வது மருள்.

புறத்தில் வெளிச்சம் இல்லையெனில் அதை ''இருள்'' என்கிறோம். அகத்தில் வெளிச்சமின்மையை ''மருள்'' என்கின்றோம்.

இந்த ''மருள்'' என்ற மனஇருள் எவ்வாறு ஏற்படுகிறது?

*   *   *

நாம் ஒரு புது ஊருக்குப் போகிறோம். அங்குள்ள பூங்காவிற்கு உலாவச் செல்லுகிறோம். மாலை மயங்கும் நேரம். பூங்காவின் வாசலில் ஒரு யானை நின்று கொண்டிருக்கிறது. அந்த யானையின் அருகிலே செல்லுகிறோம். அது சிறிதும் அசையாமல் நிற்கிறது. மிக அருகில் நெருங்கிப் பார்க்கிறோம். அப்பொழுதுதான் நமக்குத் தெரிகின்றது, அது உண்மையான உயிருள்ள யானை அன்று, யானை போல் தோன்றிய அந்த உருவம் மரத்தால் செய்யப்பட்டது என்று! யானையின் முழு உருவத்தையும் அதே அளவில் மரத்தால் செய்து தகுந்தபடி வண்ணத்தையும் பூசி இருந்ததால், அந்த உருவத்தை உண்மையான யானை என்று நினைத்து நாம் ஏமாந்து விட்டோம்!

தூரத்தில் நின்று நாம் பார்த்த பொழுது யானையின் தோற்றமே தெரிந்தது; அத்தோற்றத்திற்கு ஆதாரமான மரம் தெரியவில்லை. அருகில் வந்து பார்த்து அது மரத்தால் செய்யப்பட்டது என்பது தெரிந்தபின் அதை மரமாகவே காணுகின்றோம்; உருவம் மறைந்துவிட்டது.

முதலில், மரத்தை மறைத்துவிட்டது யானை உருவம்; அப்பொழுது யானைதான் தெரிந்தது. மரம் தெரியவில்லை. உண்மை தெரிந்த பிறகு, மரத்திலே, மறைந்துவிட்டது யானை உருவம்; அப்பொழுது மரம் தான் தெரிந்தது, யானை தெரியவில்லை. இது நம் அனுபவம்.

இதே போல்தான், மண் முதலிய ஐம்பூதங்களும் (மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்), அப்பூதங்களாகவே நமக்குத் தெரிகின்றன. அவற்றில் அமைந்துள்ள இறைமையினை (பரத்தினை) அப்பூதங்கள் மறைத்து விடுகின்றன. ஆனால், நாம் மெய்யுணர்வு பெற்று அவற்றில் எல்லாம் அடங்கியுள்ளது இறைமைதான் என்பதை உணர்ந்தவுடன், பூதங்கள் மறைந்து விடுகின்றன, இறைமையாகவே, அவற்றை நாம் காண்கிறோம்.

இவ்வாறு ஓர் எளிமையான உதாரணத்தைக் காட்டி விளக்குகின்றார் திருமூலர்:

மரத்தை மறைத்தது மாமத யானை,
மரத்தில் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்,
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம் (திருமந்திரம் 2290)

மரம் இன்றி யானையுருவம் இல்லை. நமக்கு உண்மை தெரியாத நிலையில் யானைதான் தெரிந்தது, மரம் தெரியவில்லை. அதுபோல், இறைமை இன்றி இயற்கைப்பொருள் எதுவுமே இல்லை. உண்மையினை உணராதவர்கள் இயற்கைப் பொருள்களின் தோற்றங்களையே உண்மை எனக் கொள்கின்றனர். மெய்யுணர்வு பெற்றவர்கள் அப்பொருள்களின் தோற்றங்களில் மயங்கி விடாமல், அப்பொருள்களுக்கு ஆதாரமாகவுள்ள இறைமையினையே அப்பொருள்களில் காணுகின்றனர்.

பொருள்களின் தோற்றத்திலே நாம் மயங்கி விடுவது தான் ''மருள்''. அல்லது ''மாயை'' இந்த மாயைதான் மெய்ப்பொருளான இறைமையினை மறைத்து விடுகிறது. மறைத்து நிற்கும் இந்த மாயை, அறியாமை மறைந்து விட்டால் மெய்ப்பொருள் வெளிப்படுகின்றது, என்கிறார் ஞானி திருமூலர்:

''மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள் (2548)

இவ்வாறு, தோற்றங்களிலே மயங்கி, மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று நாம் தவறாக உணரும் மயக்க நிலையினை ''மருள்'' என்று கூறுகின்றார் வள்ளுவர்:

''பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும்
மருள்'' (351)

மருளைப் போக்கும் வழி:-

இந்த மருள் நம் மனத்தை விட்டு அகல வேண்டும், இதுவே, நாம் மெய்யுணர்வு எய்தியதன் பயனாகும்.

இம்மருளை நாம் எவ்வாறு அகற்றுவது?

இதற்கும் வழிகாட்டுகிறது வள்ளுவம்!

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (357)

உள்ளது எது, உண்மைப் பொருள் எது என்பதை நம் உள்ளம் ஓர்ந்து ஓர்ந்து காண வேண்டும்.

''ஓர்த்தல்'' என்றால் உள்ளம் ஒருமுகப்பட்டு ஆராய்ந்து தெளிதல்.

நாம் ஆராய்ந்து தெளிய வேண்டியது என்ன?

இயற்கையனைத்தையும் இயக்கி நிற்கும் ஆற்றல் ஒன்று உள்ளது என்பதை உணர்வதுதான் மெய்யுணர்வு என்று கண்டோம். அந்த ஆற்றல் இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் அடங்கியுள்ளது; அந்த ஆற்றல் இல்லாது எப்பொருளும் இல்லை. எப்பொருளிலும் இலங்கும் அப்பொருளே மெய்ப்பொருளான இறைமை என்றும் கண்டோம் [குறள் 355]

ஓர்த்து உள்ளம் உள்ளது உணர்தல் :

இங்கு ஓர் ஐயப்பாடு நம் உள்ளத்தில் எழுகின்றது.

இயற்கைப் பொருள் ஒவ்வொன்றிலும் அடங்கி நிற்கும் ஆற்றலும், உருவமாகத் தோன்றும் பொருளும் வெவ்வேறானவையா? உள்ளிருக்கும் ஆற்றலும் உருவத்தோற்றமும் வேறு வேறு பொருள்களா?

நம் உடல் வேறு, உடலில் இசைந்துள்ள உயிர் வேறு என்று இருப்பது போல், இயற்கைப் பொருள் வேறு அதில் இசைந்துள்ள இறைமை வேறு என்ற நிலை உள்ளதா?

உட்பொருளும் உருவமும் வேறு வேறாக உள்ளனவா?

இவ்வாறான ஐயப்பாடு நமக்குத் தோன்றுகிறது.

இதுபற்றி நாம் சிந்தித்துத் தெளிய வேண்டும். அப்பொழுதுதான் இயற்கையனைத்துமாக உள்ள பொருள் எது என்பதை நாம் உணரமுடியும் என்கின்றார் வள்ளுவர்.

மேலே நாம் கண்ட மரயானை உருவத்தை எடுத்துக் கொள்வோம்.

அந்தப் பொருளின் உருவம் யானை, அதன் உள்ளமைந்த பொருள் மரம்.

அப்பொருளின் உருவத்தைத் தனியாகவும் உள்ளமைந்த பொருளான மரத்தைத் தனியாகவும் பிரிக்க இயலுமா?

ஏனெனில், உட்பொருளான மரந்தான் யானை உருவத்தில் உள்ளது. மரத்தின் தோற்றம்தான் யானை உருவம். மரம் சிதைந்துவிடில் அதன் தோற்றமான யானை உருவமும் சிதைந்து விடும்.

எனவே, மரத்தின் தோற்றமே யானை உருவம். மரமும் அதன் தோற்றமும் வேறு வேறானவை அல்ல; இரண்டும் ஒன்றுதான்.

உட்பொருளான மரமும் அதன் உருவமும் தனித்தனிப் பொருள்களாக இல்லை; அவை ஒன்றாகவே உள்ளன.

யானை உருவத்தைப் போல், மரத்தால் செய்யப்பட்ட குதிரை உருவம் ஒன்றும் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்.

இப்பொழுது, மரம்தான் யானை உருவத்திலும் குதிரை உருவத்திலும் இருக்கிறது.

உட்பொருளாக உள்ளது மரம், யானை உருவமும் குதிரை உருவமும் அதன் தோற்றங்கள்.

உண்மையாக உள்ளது மரம்; யானையும் குதிரையும் அதன் உருவத் தோற்றங்கள்.

உள்ளது :

இது போன்றே, உண்மையாக உள்ளது இறைமை; இந்த இறைமையின் தோற்றங்களே இயற்கையில் நாம் காணும் எண்ணற்ற உருவங்கள்.

எனவே, இறைமை வேறு, இறைமையின் தோற்றங்களான இயற்கைப் பொருள்கள் வேறு என்ற நிலை இருப்பதற்கில்லை.

உருவங்களாகக் காணப்படும் இயற்கைப் பொருள்களனைத்தும் இறைமையின் தோற்றங்கள்தாம்.

உண்மைப் பொருள் இறைமை; அதன் தோற்றங்கள் இயற்கைப் பொருள்கள்.

உள்ள பொருள் இறைமை; மற்றவை அதன் தோற்றங்கள்.

உள்ள ஒரே பொருள் இறைமை.

இறைமை ஒன்றே உள்ள பொருள், அதாவது, உள்ளது.

ஆதலால், ''உள்ளது'' என்றால் அது இறைமை ஒன்றே தான்.

எனவே, வள்ளுவர் கூறுகின்றார் :

"இறைமை ஒன்றுதான் உள்ளது என்ற உண்மையினை நம் உள்ளம் ஆய்ந்து உணர்ந்து கொண்டால், பிறவிப் பிணி நீங்கி விடுகிறது''.

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின், ஒரு தலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (357)

இறைமையினை ''உள்ளது'' என்ற சொல்லால் குறித்து, இறைநிலையினை எவ்வளவு தெளிவாக விளக்கியுள்ளார் வள்ளுவர் !

இறைமை ஒன்றே உள்ளது, எனவே, ''உள்ளது'' என்றால் இறைமை !

''உள்ளது'' என்ற உயர்தனித் தமிழ்ச் சொல்லில் எத்தகைய உண்மையினை ஆசிரியர் அடக்கி விட்டார் !

உள்ளதனைத்தும் இறைமை :

இயற்கைப் பொருள்கள் பல்வகைப் பண்புகளுடன் உள்ளன. காட்சிப் பொருளாக, ஒலிப் பொருளாக, சுவைப் பொருளாக, முகர் பொருளாக உற்றுணரும் பொருளாக அவை இருக்கின்றன.

இயற்கைப் பொருள்களனைத்தும் இறைமையின் உருவங்கள்தாம் என்றால், அப் பொருள்களின் பண்புகளும் இறைமையின் பண்புகள்தாமே ? ஆம். இயற்கைப் பொருள்களும் இறைமை, அவற்றின் பண்புகளும் இறைமை.

மலரும் இறைமை, அதன் மணமும் இறைமை.

தேனும் இறைமை, அதன் சுவையும் இறைமை.

குயிலும் இறைமை, அதன் இசையும் இறைமை.

மணியும் இறைமை, அதன் ஒளியும் இறைமை.

ஆடும் மயிலும், அதன் அழகும் இறைமை.

உடலும் இறைமை, உயிரும் இறைமை.

விதையும் இறைமை, அதன் வீரியமும் இறைமை.

இளந்தென்றலும் இறைமை, அது அளிக்கும் இன்பமும் இறைமை.

இன்பம் இறைமை என்றால் துன்பமும் இறைமைதான். ஒளி இறைமை என்றால் இருளும் இறைமைதான்.

ஆகவே, எதுவாக இருந்தாலும் அது இறைமைதான்.

உள்ளது அனைத்தும் இறைமை.

இறைமை ஒன்றுதான் உள்ளது

இந்தப் பேருண்மையினை ஓர்த்து நம் உள்ளம் உணர வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

"ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்'' (357)

''உள்ளது உணரா உணர்விலி மாபாவி என்றோ
மெள்ள மெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே''
(பராபரக்கண்ணி)

இறைமை என்ற உள்ளதை உணராதவர்கள் உணர்விலிகள், என்கிறார் தாயுமானவர்.

இறைமை ஞானத்தினை எளிமையாகப் பாடும் ஞானக் கவிஞர் பாரதியின் பாடல் இது :

உள்ளும் புறமுமாய்
உள்ளதெலாம் தானாகும்
வெள்ளமொன்று உண்டாம் அதனைத்
தெய்வம் என்பார் வேதியரே. (பரசிவ வெள்ளம்)

உள்ளதெலாம் தானாகும் இறைமையினை ''உள்ளது'' என்ற ஒரே சொல்லால் வள்ளுவம் குறித்திடும் பாங்கினை எண்ணி நாம் திளைக்கிறோம் !

உள்ளது மட்டுமே பொருள் :

உள்ளதாக அல்லாததைப் ''பொருள்'' என்று எவ்வாறு கூற முடியும்? உள்ளதான ஒன்றைத்தான் ''பொருள்'' என்று குறிப்பிடுவது பொருந்தும். எனவே, பொருளாக உள்ளது இறைமை ஒன்றுதான் ; மற்றவை எல்லாம் பொருள் அல்லவை. ஆதலால், பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்று நாம் கொள்வது அறியாமை (மருள்).

''பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும்
மருள்'' —(351)

பொருளதுவாய் நிற்பது இறைமைதான் என்பது திருமூலர் வாக்கு :

> ''பொருளதுவாய் நின்ற புண்ணியன் எந்தை''
> —(திருமந்திரம் - 2556)

இதனை ஒட்டி ஒலிக்கின்றது பாரதியின் ஞான வாக்கு :

> ''அன்றியோர் பொருளும் இல்லை ; அன்றி
> ஒன்றும் இல்லை; இதை
> ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்—இந்த
> அறிவு தான் பரம ஞானமாகும்.''
> (மகாகாளியின் புகழ்)

''சத்'' என்றால் ''உள்ளது'' என்பதே பொருள் :

''இறைமை ஒன்றுதான் உள்ளது, மற்றெதுவும் இல்லை, என்பது இந்து சமயக் கொள்கை. உண்மை என்பதைக் குறிக்கும் சம்ஸ்கிருதச் சொல்லான ''சத்'' என்பதன் பொருள் ''உள்ளது'' என்பதே. எனவே, ''உண்மையே கடவுள்'' என்ற இறைமை இலக்கணம் எனக்கு முழுமையான மனநிறைவை அளிக்கின்றது''—

இவ்வாறு கூறுகின்றார் ஆன்மீக ஞானி அண்ணல் காந்தி. [நவ இந்தியா - 31-12-1931]

(Hindu philosophy states that God alone is and nothing else exists. In fact the sanskrit word for truth is a word which literally means that which exists—SAT. So, The definition "TRUTH IS GOD" Gives me the greatest satisfaction.)

(Young India—31-12-31)

''சத்'' என்ற சம்ஸ்கிருதச் 'சொல்லின் பொருள் ''உள்ளது'' என்பதுதான். உள்ளதான ஒன்றை உண்மையானது என்றும் கூறுகிறோம். எனவே, ''உண்மையே கடவுள்'' (Truth is God) என்பதும், ''இறைமை ஒன்றே உள்ளது'' என்பதும் உணர்த்துவது ஒரே கருத்தைத்தான்.

செம்பொருள் :

இறைமையினைச் ''செம்பொருள்'' என்றும் குறிக்கின்றார் வள்ளுவர்.

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்பது அறிவு. (358)

எல்ல மாகி நிற்கும் இறைமையினைவிடச் சிறப்பு மிக்க வேறு பொருள் ஏது?

மாறாது, மறையாது என்றும் உள்ள பொருளைச் ''செம்பொருள்'' என்பதோடு அமையாமல், அதனைச் ''சிறப்பென்னும் செம்பொருள்'' என்று கூறி அதன் இணையற்ற பெருமையினை உணர்த்துகின்றார் குறளாசிரியர்.

> ''செம்பொருள் துணிவே! சீருடைக்கழலே!'' (37-1)

என்பது திருவாசகம்.

மெய்ப்பொருள் :

பிறப்பிற்கு மீண்டும் வாராத வழியை அடைய வேண்டுமெனில் கல்வியினால் மெய்ப்பொருளைக் காணவேண்டும், என்பது மற்றொரு குறள்.

> கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி. (356)

பிற்கால ஞானிகளும் இறைமையினை ''மெய்ப்பொருள்'' என்று பாடியுள்ளனர் :

> ''மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை''
> [சுந்தரர் தேவாரம்—ஆமாத்தூர்]

> ''மெய்யே வந்திங்கு எனையாண்ட மெய்யா,
> மெய்யர் மெய்ப் பொருளே''
> [சுந்தரர் தேவாரம்—ஆலங்காடு]

> ''உலகுக்கோர் மெய்ப்பொருளாம் பிஞ்ஞகனை''
> [நாவுக்கரசர் தேவாரம்—கச்சிஏகம்பம்]

இறைநிலைச் சொற்கள் :

இவ்வாறு, ''மெய்யுணர்தல்'' என்ற அதிகாரத்தில், இறைமையினை உணர்ந்து கண்டவர் பிறவி நீக்கம் பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது. பிறவிநீக்கம் என்பது பற்றிப் பின்னால் காண இருக்கிறோம். இங்கு, இறைமையினைக் குறிக்கும் வகையில் நான்கு சொற்கள் உள்ளன.

1) மெய்ப்பொருள்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (855)

2) செம்பொருள்

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. (358)

3) பொருள்

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. (351)

4) உள்ளது

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (357)

உரையாசிரியர் பரிமேலழகர் ''செம்பொருள்'' ''மெய்ப்பொருள்'', ''உள்ளது'' என்ற சொற்களின் சிறப்பினை விளக்குகிறார்:

''தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூயதாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி, அதனைச் ''செம்பொருள்'' என்றார். மேல், ''மெய்ப் பொருள்'' எனவும், ''உள்ளது'' எனவும் கூறியதூஉம் இது பற்றி என உணர்க.'' (குறள் 358- விளக்கவுரை).

இயற்கை உருவங்களின் தோற்றத்தில் மயங்கும் நமக்கு அவற்றில் இலங்கும் உட்பொருளான இறைமை புலப்படுவதில்லை. இந்நிலையில் உருவங்களையே உண்மை என நாம் கொள்ளுதல் கூடாது என்பதை உணர்த்தும் வகையில், இறைமையினை ''மெய்ப் பொருள்'' என்கிறார் வள்ளுவர்.

எல்லாமாய், எங்குமாய், என்றுமாய் இலங்கும் அந்த மெய்ப்பொருளை, ''செம்பொருள்''. என்று சிறப்பித்துக் கூறுகின்றார்.

இயற்கைப் பொருள்களின் தோற்றங்களை மாயை என்றோ, பொய்த் தோற்றங்கள் என்றோ வள்ளுவர் கூறவில்லை. அவ்வாறு கூறாமல், அத்தோற்றங்களில் அடங்கியுள்ள இறைமைதான் பொருள்; அந்தப் பொருளின் தோற்றங்கள்தாம் இயற்கைப் பொருள்களின் உருவங்கள்

என்கிறார். ஆதலால் இறைமையினைப் ''பொருள்'' என்று குறிப்பிடுகின்றார்.

இறைமையினைத் தவிர வேறு எதையும் ''பொருள்'' என்று கொள்ளுவதற்கு இல்லாத நிலையில், இறைமை ஒன்று மட்டுமே உள்ளதான பொருள் ஆகின்றது. அந்த உள்ள பொருள் ஒன்றை ''உள்ளது'' என்று குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமானது!

அது என்றும் உள்ளது, எங்கும் உள்ளது, எல்லாமாக உள்ளது; எனவே அது ''உள்ளது'', என்ற உயர் தனிச் சிறப்புச் சொல்லால் குறிக்கப் பெறுகின்றது!

வள்ளுவர் வடித்த ''உள்ளது'' என்ற உயர் தனிச் சிறப்புச் சொல், பல நூறாண்டுகளுக்குப் பின்னரும் இறைமையினைக் குறிக்கும் ஏற்றமிகு சொல்லாக இலங்குகிறது!

இதோ, ''நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தரின்'' அருட்பாடல் :

உள்ள தன்தனைக் காண்பன் கீழென்ற மாமணி வண்ணனும்,
உள்ள தன்தனைக் காண்பன் மேலென்ற மாமலர் அண்ணலும்,
உள்ள தன்தனைக் கண்டிலார், ஒளியார் தருஞ்சடை முடியின்மேல்
உள்ள தன்தனைக் கண்டிலா ஒளியார் விளநகர் மேயதே.
[திருவிளநகர்]

இறைநிலையினை எடுத்துக் காட்டும் ''உள்ளது'' என்ற சொல்லின் உயர்வினை என்னென்பது!

வடமொழிச் சொற்களான ''பிரமம்'', ''ஆத்மா'', ''பரமாத்மா'', போன்ற பகவத் லக்ஷணங்களைக் கூறும் வார்த்தைகள் பலவும் செந்தமிழில் புகுத்தப்பட்டு, ''மணிப் பிரவாள உரைநடை'' உண்டாக்கப்படுவதற்குப் பல நூறாண்டுகள் முந்திய காலம் வள்ளுவர் காலம். எனவே தான், இறைமையின் இலக்கணத்தைத் தூயதமிழ்ச் சொற்களிலே வள்ளுவத்தில் நாம் காணுகிறோம்!

நல்லகாலமாக, வள்ளுவர் வடித்துள்ள இறைநிலைச் சொற்கள் மறைந்து போகாததுடன், பிற்காலத்திய மெய்யடியார்களின் அருட்பாடல்களிலும் அவை அமைந்து விளங்குகின்றன! இதனைக் காட்டும் வகையில்தான் அப்பாடல்களின் தொடர்கள் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன!

இறைமை நிலை இயம்பும் இன்தமிழ்ச் சொற்களை இதயத்தில் இசைத்து இன்புறுவோமாக! இறை அறிவு பெறுவோமாக!

———

(தொடரும்)

வைகறை விடியலில் வரலாற்று அழுந்தூர்

டாக்டர். இரா. கலைக்கோவன்
செல்வி. மு. நளினி எம்.ஏ., (வரலாறு)

(முன் இதழ் ௮௧ஆம் பக்கத் தொடர்ச்சி)

ii. அதே சுவரிலுள்ள இன்னொரு கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை
கொண்டான் பாண்டி குலாசனி வளநாட்டு உடையார்
திருவானைக்கா உடையார் கோயில் தேவகன்மிக்கும்,
ஸ்ரீ மாகேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும், ஸ்ரீ
கார்யம் செய்வார்க்கும் இத்தேவர்க்கு வேண்டும்
நிவந்தங்
களுக்கு இறுப்பதாக தேவதான இறையிலியா

2. ன நிலம் முப்பதிற்று வேலி சித்திரை மாதத்து சோம
கிரகணத்து நீர் வார்த்த நிலம் இருபதிற்று வேலிக்கும்
சோனாடான கடலடையாதிலங்கை கொண்ட சோழவ..

முற்றுப்பெறாத நிலையிலிருக்கும் இக்கல்வெட்டு திருவானைக்கா கோயிலுக்கும், அழிந்தியூர்க் கோயிலுக்கும் இருந்த தொடர்பினைச் சுட்டுகிறது. இதில் குறிக்கப்படும். கோனேரின்மை கொண்டான் முதலாம் குலோத்துங்கனுக்குப் பிற்பட்ட சோழவேந்தர்களுள் ஒருவனாவான். இவன் காலத்தில் பாண்டி குலாசனி வளநாட்டில் இருந்த திருவானைக்கா கோயில் இறைவனின் பெயர் திருவானைக்கா உடையார் என்பதாகும். சித்திரை மாதத்து சந்திரகிரகணத்தன்று இருபது வேலி நிலம், தேவதான இறையிலியாக நீர் வார்த்துத் தரப்பட்டது. இது தவிர ஏற்கனவே [illegible] தரப்பட்ட நிலம் முப்பது வேலியுட்பட ஆகமொத்தம் இவ்வைம்பது வேலி நில விளைவு கொண்டு, திருவானைக்கா கோயிலின் தேவகன்மிகள், மாகேசுவரக் கண்காணிகள், இக்கோயில் ஸ்ரீ கார்யம் செய்வார் ஆகியோர்க்குரிய படித்தரமும், அழிந்தியூர்க் கோயில் இறைவனுக்குரிய நாள் படி படையல்களும் செய்திடல் வேண்டுமென இக்கல்வெட்டு வழி அரசனுடைய நேரிடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

iii. மகா மண்டபத்தின் வடபுறச் சுவரிலுள்ள கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவனச்
சக்கரவர்த்திகள்
ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு முப்பதாவது பங்குனி
பியத்
நாள் வடகோனாட்டு அழிந்தியூராக இசைந்த
ஊரவரோம்
நாயனார் மன்னர்க்கு பிரமாணம் பண்ணிக்குடுத்த
பரிசாவது
எங்கள் பக்கல் இவர் விலைகொண்டு, நாங்கள்
உடையார்
வரவுணிசுவரமுடைய நாயனார்க்கு குடிநீங்காத்
தேவதானமாகத்
திருச்சூலத்தாபநம் பண்ணிக் குடுத்த குடிக்காடு தட்டான்
குள

2. மும் கணக்கன் குளமுமாந வரவுணப்பெருமாள்
நல்லூர்க்கு
கடமை நிச்சயித்தபடி இக்குடிகாடு நான்கெல்லைக்
குட்பட்ட
வயலில் பயிர் ஏறின நிலம் பயிர் பாய்ந்து பயிர் கண்ட
நிலத்துக்கு மாத்தால் அஞ்சுலமாக வந்த நெல்
நாயனார் திருக்
கொட்டாரத்தே தேவதானம் கோயில் கணக்க
ஸ்ரீ கார்யம்
செய்வாரோமே அளக்கக் கடவாராகவும், இவ்வயலில்
எள்கு,
வரகு, திணை விளைஞ்ச பயிருக்கு மாத்தால் இரண்டு
பணம்
கொள்ளக் கடவதாகவும் இப்படிக்கு
சந்திராதித்தவரை செ

3. ல்லக் கடவதாகவும் வெட்டிப் பிரமாணம் பண்ணிக்
குடுத்தோம்
நாயனார் மன்னர்க்கு வடகோனாட்டு அழிந்தியூர்
ஊரவரோம்
கோனாட்டு வேளான் எழுத்து அனுக்க நம்பி எழுத்து
பிள்ளை

வேளான் எழுத்து இராச வேளான் எழுத்து அணுக்கி
வேளான்
எழுத்து அழகர் மூவேந்த வேளான் எழுத்து விக்கிரம
சோழ வேளான்

திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர பாண்டிய தேவனின் முப்பதாம் ஆட்சியாண்டு, பங்குனிமாதம் பத்தாம் நாள் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு அழிந்தியூரை வடகோனாட்டில் உள்ள இடமாகச் சுட்டுகிறது. இறைவனின் பெயர் வரவுணீசுவரமுடைய நாயனார் என்றுள்ளது. அழிந்தியூரில் ஊரவை இருந்த செய்தியை இக்கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது. இக்கோயிலுக்குக் குடிநீங்காத் தேவதானமாக வரவுணப் பெருமாள் நல்லூர் என்னும் சிற்றூரைக் கொடையாகத் தந்ததுடன், அவ்வூர் நில விளைவுகளில் நன்செய்யில் ஒரு மா நிலத்துக்கு ஐந்து கலம் நெல்லும், எள், ராகி, துவரை முதலிய புன்செய்ப்பயிர்கள் விளையும் நிலங்களில் ஒரு மா நிலத்துக்கு இரண்டு பணமும், இக்கோயில் ஸ்ரீகாரியம் செய்பவர் பெற்று, அது கொண்டு இக்கோயில் செயல்பாடுகளைக் கவனித்து வருமாறு ஊரவை ஏற்பாடு செய்ததைக் கல்வெட்டு உணர்த்துகிறது.

iv. மகாமண்டபத்தின் தெற்குப் புறச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்ரீ நாயனார் கோயில் திருமண்டபம் கட்டோடு
இட்டான் இவ்வூர் காணியுடைய

2. காடயன் வலையன் சூற்றிச் சேந்தனான பெரிய
நாட்டு முத்தரையன் தன்மம்

இக்கோயில் முகமண்டபத்தைக் கட்டியவனாக இவ்வூரைச் சேர்ந்த காடயன் வலையன் சூற்றிச் சேந்தன் என்னும் பெரியநாட்டு முத்தரையன் பெயரை இக்கல்வெட்டு குறிக்கிறது.

v. கருவறையின் மேற்குப் புறச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இக்கல் ஒன்றும் அழிந்தியூரில்
வண்ணான் அழிவில்லாத தேவன் மகன் மொன்னை
தன்மம்

vi. மையக் கோயில் தென்புற நுழைவாயிலருகே படிக்கட்டாய்ப் பயன்படுத்தப்படும் கல்லொன்றின் மீது காணப்பட்ட கல்வெட்டு

1 ...... யனார் கோயில் ...
2 ... பணி செய்வித்த ......
3 ... பிச்சியார் மடத்து ...
4 ... லாதன்

vii. செங்குளத்தருகே கிடைத்த துணுக்குக் கல்வெட்டு

1 பூதி திரு ஆழ்வார் நா
2 வாமை அழகியப்
3 ப (ல்) லவரையன் குமநடங்
4 ங் மான கல்லன் சள
5 தி கடுநி நகங்கன் ம
6 மைந்தன் (செ) மின்
7 திரு வ ....

viii. சேட்டை தேவியின் அடிப்புறத்தே உள்ள கல்வெட்டு

ஸ்ரீ நாதெலைரி

ix. சாளரத்துக் கல்வெட்டு

1 ... வரகுண ஈச்சர மண்டபத்தில் சாஸகம்

x. வீரக்கல்லில் உள்ள கல்வெட்டு

1 ... றை குல்ல
2 யன் மீபுரம் தலை கொய்து

xi. செட்டி ஊருணிப்பட்டி கல்வெட்டு

அ. முன்புறம்

1 உ காலையுக்தி வருஷம் மாசி மாசம் எட்டாம்
தேதிக்கு
2 ஸ்ரீ துக்கா மாட சினாயக்கரவர்கள்
3 இருமுடி செட்டியார்ருட தன்
4 மத்து நம்முட சாமையாகி
5 ய் வடமுகம் அழுந்தூர் ஸ்ரீ (கோ)ாவில்
6 நந்தவன தெறுப்பக் களத்து உள்ள
7 ளகத் தளத்து மேலை பெண்புணான.

191729
சென்னை-600 003

ஆ. விளிம்பில்

8 சீவினாப்பு அளைந்து மேற்படிக்குந் தள்ளுபடி
9 வீரப்பர் சதாபாசன போகம் நீக்கி வீர
10 ப்பர் அளைமுகில் இராசகுண

இ. பின்புறம்

1 மாகத்தாய் ஆணையிட்டபடியினாலே
2 புத்திரா புத்திரா பரம்பரைக்கும் அது
3 பவித்துக் கொண்டு தன்மத்தை பரிபா
4 லனம் பண்ணிக்கொண்டு சுகமெ
5 இருந்தப் படியும் அதற்கும் இடத்தில்
6 இந்த தன்மத்து இரு ஆதானும்
7 ஒருவர் பாதகம் பிசகு பண்ணின
8 குடித்தனம் இப்போக்கில்
9 கெடுவதாகவும்
10 தன்மமே செயம்.

இந்தப் பதினோரு கல்வெட்டுகளும் அழிந்தியூர் பற்றிப் பல தகவல்களைத் தருகின்றன. இத்தகவல்களை அரசியல், சமுதாயம், கோயிலாட்சி என்ற தலைப்புகளின் கீழ் விரிவாகப் பார்ப்போம்.

அரசியல் செய்திகள்

முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டினால் இவ்வூரின் பெயர் அழிந்தியூர் என்பதும், இது இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டின் உட்பிரிவான உரத்தூர்க் கூற்றத்தில் அமைந்திருந்த ஊர் என்பதும் தெரிய வருகின்றன. குலசேகர பாண்டியன் கல்வெட்டு அழிந்தியூரை வடகோனாட்டில் இருந்த ஊராகக் காட்டுகிறது. இவ்விரண்டு கல்வெட்டு களுமே அழிந்தியூரில் ஊரவை இருந்த செய்தியைத் தருவதுடன், அவ்வூரவையின் செயல்பாடுகளையும், ஊரவை யின் உறுப்பினர்களையும் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

(தொடரும்)

பதிப்பாசிரியர்களும் கடமைகளும்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி, விரிவுரையாளர்,
ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பதிப்பு - ஒரு தொடர்பணி

பதிப்பித்தல் என்பதற்கு ஒன்றை வெளிப்படுத்திக் காட்டுதல் என்று கூறலாம். ஓவியமாயினும் சிற்பமாயினும் கல்வெட்டாயினும் பிறவாயினும் அவற்றைப் பிறிதொன்றின் மூலமாகப் பதித்துவைத்தல் வெளிப்படுத்திக் காட்டுதலாகும். ஒவ்வொரு கால கட்டத்திலும் எழுது பொருள்களின் (Writing Materials) பல்வேறு நிலைகளுக்கேற்பப் பதிப்பித்தல் மாறுபட்டிருக்கும் என்று கொள்ளலாம். ஓலை எழுதுபொருளாகப் பயன்பட்ட காலத்தில் ஒருவர் கருத்தை - படைப்பை அவ்வோலையின் மூலமாகப் பதிப்பித்து வந்தனர். ஓலைச்சுவடிகளில் இன்னார் குமாரன் இன்னார் எழுதியது என்று குறிப்பிடப்பெறும் முன், பின்குறிப்புகளெல்லாம் அந்நூலுக்கு (சுவடிக்கு) உரிய பதிப்பாசிரியர் அவரே என்று துணிதற்கு இடமளிக்கும். சுவடி எழுதியவன், எழுதப்பட்ட காலம், எழுதவியன்ற இடம் போன்றவை இன்று அச்சுநூல்களில் காணப்படும் பதிப்பு விவரங்களைப் போன்றே அமைந்துள்ள தன்மை, அன்றைய நிலையில் அவை பதிப்பு வேலையாகப் போற்றப்பட்டிருந்தன என்பதை நன்கு விளக்கும்.

பதிப்பு - சொற்பொருள்

சுயமாக உருவாக்கி வெளியிடுவதும், முன்னுள்ளவற்றை வெளியிடுவதுமே பதிப்பு என்று கொள்ளப்படும். முன்னுள்ள வற்றை வெளியிடுதல் என்பது இதுவரை அச்சாகாத, வெளிவராத எழுதப்பட்ட செய்திகளைக் குறிக்கும்.

பதிப்பித்தல் என்னும் பொருள்தரும் ஆங்கிலச் சொல்லாகிய 'edit' என்பதும் ēdit - us' என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது என்று அகராதி கூறும் (OED Vol.- III 1961). ēditiō - ōnis என்னும் இலத்தீன் சொல்லுக்கு நூல் வெளியிடுதல் (The publishing of a Book) என்ற பொருளை இலத்தீன் ஆங்கில அகராதி கூறுகின்றது. (D. D. Simpson, Latin English Dictionary).

பதிப்பித்தல் என்பதற்கு அகராதிகள் கூறும் பல்வேறு விளக்கங்கள் அதற்குரிய பொருள்களைத் தெளிவுபட எடுத்துக் காட்டுகின்றன.

1) எழுத்து வடிவங்களில் நிலவுகின்ற முந்தைய படைப்பாளர்களின் பலதரப்பட்ட படைப்புகளை வெளியிடுதலும் உலகோர்க்கு அளித்தலும்,

2) முந்தைய படைப்பாளர்களின் படைப்பையே பதிப்புப் பொருளாகக் கொண்டு அதனைப் பதிப்பிற்கு உருவாக்கம் செய்தலும்,

3) முழுமையுடைய ஒன்றையோ பிறரின் பகுதியான ஒன்றையோ முறைப்படுத்தி அமைத்தலும் உருவாக்குதலும்,

4) திரைப்பட வெளியீட்டிற்கான ஒலி, ஒளி பதிவுகளில் தேவையில்லாதவற்றை நீக்கிவிட்டு அதனைச் செப்பம் செய்தலும்,

5) செய்தித்தாள், மலர் போன்றவற்றின் வெளியீட்டில் அவற்றை மேற்பார்வை செய்தலும், நெறிப்படுத்துதலும் பதிப்பு (edit) வேலைகளாகக் கொள்ளப்படுகின்றன.

மேற்கருத்துகளைப் பொதுமைப்படுத்தி நோக்கும் பொழுது,

அ. தானே புதிய படைப்பை உருவாக்குதல்,

ஆ. முன்புள்ள பிறர் படைப்பை வெளிப்படுத்திக் காட்டுதல்,

இ. தொகுப்புக்கூறுகளை வகைப்படுத்திக் காட்டுதல் போன்றவை பதிப்பித்தலின் செயலாக அடங்குமென்பதை உணரலாம்.

பதிப்பு வேலையும் வெளியீட்டு வேலையும்

பதிப்பிற்கு உருவாக்குதல் பதிப்பு வேலை என்று கொண்டால் அதனை வெளியிடுதல் வெளியீட்டுப் பணியாகும். பதிப்பித்தல் வேறு; வெளியிடுதல் வேறு. பதிப்பிற்குரிய பணிகளுக்குள்ளாகாமல் ஒரு வெளியீட்டாளர் பதிப்பாளராக முடியாது. வெளியிடுதல் என்பது பதிப்பு வேலைகள் முடியப் பெற்ற ஒரு படைப்பை அச்சுவடிவமேற்றி உலகோர்க்கு அளித்தலும் அளிக்கக் காரணமாய் இருத்தலும் ஆகும் (OED Vol. iii. 1961). பதிப்பு என்பது முன்னிலை; வெளியீடு

என்பது பின்னிலை; நூலை வெளிக் கொணர்தல் பதிப்பு என்று கூறும்பொழுது, நூலாக்க வேலைகள் முடிந்தபின் அதனைக் கொணரும் வேலையும் இப்பொழுது பதிப்பு வேலையாகக் கருதப்பட்டு வருகின்றது. இவ்வளவில் பதிப்பித்தல் என்பதை அச்சேற்றுதல் என்று கொண்டு சில அச்சகங்கள் பதிப்புப் பொறுப்பை மேற்கொண்டனவாக நிலவுதலைக் காணலாம். அத்தகைய நிலையில்கூட நூலாசிரியர்க்கு முதன்மை தந்து அவ்வச்சகங்கள் இலங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறாயின் பதிப்பு வேலை என்பது என்ன? இதற்கு ஓராசிரியர் தரும் விளக்கத்தை இங்கு அப்படியே நோக்குதல் பொருத்தமுடையதாக விருக்கும்.

To edit means to present anything in a disciplined manner-to arrange, to annotate or otherwise prepare an author's work for publication (M- L. Chakkaraborti 1975, p. 318)

உள்ளதைக் கொணர்வதும் உள்ளத்தைக் கொணர்வதும் நூலாக்கம் அல்லது நூற்பதிப்பு என்று கொள்ளலாம். சான்றாக உள்ளதைக் கொணர்தல் - முன்னிலவுவதை வெளிக்கொணர்தல் என்பதற்குச் சுவடியை அச்சேற்றுவதைக் கொள்ளலாம். அச்சுவடியைத் தேடி, அதற்குரிய பல பிரதிகளையும் தொகுத்து, அவற்றுள் ஒன்றை அடிப்படையாகவும் ஏனையவற்றைத் துணையாகவும் கொண்டு, சுவடி பெயர்த்தெழுதிப் பிழைநீக்கம் செய்து, பாடம் தேர்ந்து படித்தவை போற்றி, விளக்கம் அளித்து வேண்டுவன தந்து, படிபெயர்த்தெழுதிப் பாங்குடன் திருத்திப் பதிப்புக்குரிய செம்பதிப்பாக விதிப்படி அளித்தலே பதிப்பு வேலையாகும். அச்சக வாசலை அடையும்வரை நிகழ்கின்ற அனைத்து வேலைகளுமே பதிப்பு வேலைகள் என்று கொள்ளத் தகும். எனவே பதிப்புக்குரிய - பதிப்பை நோக்கிச் செய்ய வேண்டிய வேலைகள் பதிப்பு வேலைகள் எனலாம்.

பதிப்பாசிரியர் (Editor)

பதிப்பு வேலைகளைச் செய்பவர் பதிப்பாசிரியர்; பதிப்பு, ஆசிரியர் எனும் இருசொற்களின் கூட்டுச்சொல்லே பதிப்பாசிரியர் என்பதாகும். இச்சொல்லோடு மட்டுமன்றித் தொகுப்பு, வெளியீடு, புத்தகம், பத்திரிகை, இதழ் போன்ற சொற்களோடும் இவ்வாசிரியர் என்ற சொல் சேர்ந்து

தொகுப்பாசிரியர், வெளியீட்டாசிரியர், புத்தகவாசிரியர், பத்திரிகையாசிரியர், இதழாசிரியர் எனக் கூட்டுச்சொற்களா வதைக் காணலாம். இவற்றினின்றும் ஒருண்மை புலனாகும். ஆசிரியர் என்ற சொல் (Teacher) தனக்குரிய பழம் பொருளினின்றும் மாறுபட்டிருப்பதை உணரலாம். ஆசிரியர் என்ற சொல்லிற்குப் பல பொருள்கள் உண்டு. குரு, ஆக்கியோன், உரிமையுடையோன், செய்பவன் என்னும் பல பொருள்களைக் கூறலாம். பின்னுள்ள இருபொருள் களையும் ஏற்பனவாகவே மேற்கண்ட கூட்டுச்சொற்கள் அமைந்துள்ளன. 'ஆளன்' என்னும் பின்னொட்டிற்கு (Suffix) உள்ள பொருளைக் கொண்டதாகவே 'ஆசிரியர்' என்ற சொல் காணப்படுகின்றது என்று கூறலாம். ஆராய்ச்சி யாளர், தொகுப்பாளர் போன்று பதிப்பாளர் என்று கூறலாமா என்பதும் ஆய்விற்குரியது.

எனினும் பதிப்பு வேலைகளைச் செய்பவர் பதிப்பாசிரியர் எனத் தொழிற்பெயர் உணர்த்தும் நிலையிலேயே அவ்வாசிரியர் என்ற சொல் அமைந்துள்ளது என்று கருதலாம். எனவே சொற்றன்மை திரிந்து பின்னொட்டு நிலையில் பதிப்பு என்ற சொல்லோடு சேர்ந்து நிற்கிறது என்பது புலனாகும். இச்சிறப்புச்சொல்லாகிய பதிப்பாசிரியர் என்பது நூற்பதிப்பாசிரியர் என்ற தன்மையில் மட்டுமே நமக்குப் பொருந்துவதாகத் தோன்றக்கூடும். பதிப்பாசிரியர் (editor) என்பதனோடு தொடர்புடைய பிற சொற்களை நோக்கும் பொழுது இவ்வுண்மை நமக்குப் புலனாகும்.

பதிப்பாசிரியர்கள் பலர்

பதிப்பாசிரியர் என்றவளவில் நாம் பலரைக் காண முடியும். நூற்பதிப்பாசிரியர் (Book Editors) இதழாசிரியர் (Journal Editor), மலர் ஆசிரியர் (Magazine Editor), கலைக் களஞ்சியப் பதிப்பாசிரியர் (Encyclcpeadia editor) அகராதிப் பதிப்பாசிரியர் (Lexicon Editor), பத்திரிகையாசிரியர் (News paper Editor), திரைப்படத் தொகுப்பாளர் (Motion picture Editor), ஓவியத் தொகுப்பாளர் (Art Editor) போன்றும் இன்னும் பல திறத்திலும் இப்பொருண்மையுடையோர் காணப்படுகின்றனர். இவற்றுள் பதிப்பாசிரியர் என்ற பெயரில் சில அமைவுகளும், ஆசிரியர் என்ற பெயரில் சில அமைவுகளும், தொகுப்பாளர் என்ற பெயரில் சில அமைவு களும் நிலவுவதைக் காணலாம்.

கலைக்களஞ்சிய அகராதிப் பதிப்பாசிரியர்கள்

முதன்மைப் பதிப்பாசிரியர், பதிப்பாசிரியர்கள், துணைப் பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள் என்ற முறையில் அடங்கிய குழு களஞ்சிய அகராதிப் பணிகளை மேற்கொள் கின்றது.

கட்டுரைகளைத் தாங்களே எழுதியும், செய்திகளை வல்லுநர் பலரிடமிருந்து திரட்டியும் தொகுத்துக்கொள் கின்றனர். தொகுக்கப்பெற்றவை அனைத்தும் பதிப்பாசிரியர் குழுவினால் ஆய்வு செய்யப்பெற்று மீண்டும் துறை வாரியான வல்லுநர்களால் சரிபார்க்கப்படுகின்றன. பிறகு முதன்மைப் பதிப்பாசிரியரின் பார்வைக்குப்பிறகு அவை ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. செய்திகளைப் பிறர் கொண்டு திரட்டுவது முதல், தொகுத்து வகைப்படுத்திச் சரி பார்த்து ஏற்றுக் கொள்வது முடிய பதிப்பாசிரியர் குழுவின் தலையாய பணியாக அமைகின்றது.

தனி ஒருவராலும் களஞ்சியத்தைப் பதிப்பிக்க முடியும் என்பதற்கு அபிதான சிந்தாமணி சான்றாகும். ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் தமது முகவுரையில் இதனைக் குறிப்பிடும்போது "நான் ஒருவனே பலர் கூடிச் செய்யவேண்டிய இதனை "க்லேசபோத நியாயமாகப் பல விடங்களில் சென்று" பல அரிய கதைகளைத் தொகுத்த தாகக் கூறுகிறார். மேலும் அபிதான சிந்தாமணியை எழுதப் புகுங்கால் அவர் மேற்கொண்ட சில செயற்பாடுகளையும் குறிக்கிறார். "இதனை எழுதப்புகுங்கால் சிலர் வாயிலாகக் கேட்டதை அப்போதைக்கப்போது மறப்பெனும் கள்வன் அவற்றை வஞ்சியாது என் கைப்புத்தகத்தில் முதலில் குறித்து வைத்துக்கொண்டு, பின்னர்க் கதையெழுதும் புத்தகத்தில் பதித்து, அவற்றைச் சின்னாள் பொறுத்து, அகராதி முறைப் படுத்தி மீண்டும் பெயர்த்து எழுதினேன்" (ஆ. சிங்காரவேலு முதலியார், 1986) என்று கூறுவார். இக்கூற்றினுள் இரண்டு உண்மைகள் அடங்கியுள்ளன. ஒன்று அவருக்கு அப்பணியில் இருந்த பொறுமை உணர்வு; இரண்டு அயராத முயற்சி, இவ்விரண்டு உணர்வுகளும் பதிப்பாசிரியருக்கு மிக இன்றியமையாதவை.

அகராதி களஞ்சியப் பணிகள், தனித்தாயினும் கூட்டு முயற்சியினாலாயினும் செய்யப்பெறும்பொழுது அவற்றுள் தம் முழு நேரத்தையும் செலவிடுகிற கடமை உணர்வு பதிப்

பாசிரியருக்கு இருக்க வேண்டும். இல்லையெனில் பணியும் நிறைவடையாது; நிறைவடைந்தாலும் சிறக்காது. பாலி ஆங்கில அகராதியின் தயாரிப்புப் பணியைப் பற்றி அதன் பதிப்பாசிரியர் கூறும்பொழுது அகராதிப்பணி என்பது ஒருவரின் இடைப்பட்ட காலத்திலோ (enpassant) எஞ்சிய நேரத்திலோ (spare time) செய்யவியலாதது; அவரின் முழு நேரத்தையும் அதற்காகவே செலவிட வேண்டும் என்று கூறுவார் (William stede, 1975).

இவ்வாறு இப்பதிப்பாசிரியர்க்குள்ள கடமையுணர்வுகளும் பிறவும் ஒரு சுவடிப்பதிப்பாசிரியர்க்கும் மிக இன்றியமையாது வேண்டப்படுகின்றன. புதியன உருவாக்கும் திறமும், இருப்பதை வெளிக்கொணரும் திறமும் மேற்கூறப் பெற்ற பதிப்பாசிரியர்களின் பொதுமைக் கூறுகளைக் கொண்டவர்க்கே கைவரப்பெறும்.

நூற்பதிப்பாசிரியர்கள் (Book Editors)

நூற்பதிப்பாசிரியர்கள் என்ற வடிவில் நாம் இங்குக் கருதுவது இலக்கிய இலக்கண நூற்பதிப்பாசிரியர்களையே. அவர்களுள்ளும் இருப்பவற்றை வெளிக் கொணர்பவரும் புதியனபடைப்பவரும் என இருதிறத்தோர் உள்ளனர். இருப்பவற்றை வெளிக்கொணரும் தன்மையரே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார். இருப்பவை என்பது இதற்கு முன் வெளிவரப்பெறாத சுவடியில் உள்ளனவும் வெளிவந்து அருகியனவுமாகும். இவ்விருநிலையிலும் நூல்கள் பதிப்பிக்கப் பெறுகின்றன.

சிறப்பாகச் சுவடியில் உள்ளவற்றைப் பதிப்பிக்கும் ஆசிரியர் என்னென்ன தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும், என்னென்ன கடமையுணர்வுகள் கொண்டு இருக்கவேண்டும் என்பனவற்றையெல்லாம் அறிவார்ந்த பதிப்பாசிரியர்கள் பலரும் திறம்படக் கூறிச்சென்றுள்ளனர். வையாபுரிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, சண்முகம்பிள்ளை போன்றோர் பல கட்டுரைகளில் மேற்கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளனர்.

சுவடிப் பதிப்பாசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் பணியை இருநிலைகளில் பகுத்துக் காணலாம்.

1. சுவடி பெயர்த்தெழுதுவதற்குமுன்
2. சுவடி பெயர்த்தெழுதிய பின்

சுவடி பெயர்த்தெழுதுவதற்குமுன்

ஒரு சுவடியைப் பதிப்பிக்க எடுத்துக்கொண்டவுடன் அதன் பிரதிகள் இன்னும் உள்ளனவா என்று அறிந்து தேடுதலில் முயலவேண்டும். உ. வே. சாமிநாதையர் சுவடி தேடி அலைந்த நிகழ்ச்சிகளை அவர்தம் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டு உள்ளார். சுவடி நூலக அட்டவணைகளைக் கண்டு அவற்றின் படிகளைப்பெற்ற பின் அவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பதிப்பிற்குத் தெரிந்தெடுத்துக் கொள்வதில் பதிப்பாசிரியர் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். அதன் நிலை (முழுமை அல்லது குறை) தன்மை, காலம், செம்மை போன்ற பல கூறுகளின் அடிப்படையில் அத்தேர்வு நடைபெறும். ஆசிரியர் தம் கையாலேயே எழுதிய பிரதியைப் (Autograph) பெறுவதென்பது இயலாதது. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தாமே எழுதிய சுவடிகள் இன்னும் இருப்பதாகக் கூறுவர். சுவடி பெயர்த்தெழுதுபவர் எழுதிய சுவடிகளே (Holograph) நமக்குக் கிடைப்பதால் அவற்றுள் மேற்கண்ட கூறுகளைக் கொண்டு மூலப்பிரதியைத் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு தேர்ந்தெடுத்த பிரதியை ஆதாரமாகக் கொண்டும் ஏனையவற்றை அதற்குத் துணையாகவும் கொள்ளுவர். அதன்பின் அம் மூலப்பிரதியை அதன் தன்மைக் கேற்பப் பெயர்த்தெழுதுவர்.

சுவடி பெயர்த்தெழுதிய பின்

நூல் முழுமையும் பெயர்த்தெழுதிய பின் பலவற்றோடும் ஒப்பிட்டுப் பாடவேறுபாடுகளைப் பட்டியலிட்டுக் குறித்துக் கொள்வர், அவற்றுள் எவற்றை நூலுள் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்பதும் எந்தப் பாடத்தை இறுதிசெய்து உறுதிப்படுத்த வேண்டும் என்பதும் பதிப்பாசிரியரின் பொறுப்பே.

பாடவேறுபாடுகளை ஒப்பிடும்பொழுது வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் எழுத்துக்கு எழுத்து ஒப்பிட வேண்டும் என்று கூறுவர். அவ்வாறு ஒப்பிடும்போது மூலத்திற்கு ஒவ்வாத பொருள்தரும் பிழையான பாடங்களைக் களைந்து அதனைத் திருத்துவது பதிப்பாசிரியரின் கடமையாகும் (Chakkaraborti, 1975, p. 317). திருத்தப்பட்ட பாடத்தை மூலத்திலும், பிழையாய் இருந்த பாடத்தை அடிக்குறிப்பிலும் தருதல்வேண்டும். விளங்காத பகுதியையும், பாட திருத்தத் திற்கான கருதுகோளையும் அடிக்குறிப்பில் தரல் வேண்டும்.

அவ்வாறு தருவது நுகர்வோரின் ஆய்வு நோக்கிற்குப் பெரும் பயன் அளிப்பதாக அமையும். அதன்பின் அவற்றை ஒழுங்கு படுத்தி வேண்டியவற்றிற்கு விளக்கம் தந்து, வேண்டும் பின்னிணைப்புகளுடனும் பிறவற்றுடனும் அச்சுக்கு ஏற்ற நிலையில் தயார் செய்தல் வேண்டும். அவ்வாறு இருநிலைகளிலும் செய்யப்பெறுகின்ற வேலைகள் அனைத்தும் பதிப்பாசிரியர்க்குரியன.

தகுதியும் கடமையும்

இத்தகு பதிப்புப் பணியை மேற்கொள்ளுகிற பதிப்பாசிரியர் பல்வகைத் திறனும் பெற்றவராக இருக்க வேண்டும். பலதுறை அறிவும் கைவரப்பெற்றவராக இருந்தால்தான் பதிப்பின் திறம் நன்கு வெளிப்படும்.

ஒரு சுவடிப் பதிப்பாசிரியர் நல்ல சுவடிப் பெயர்ப்பாளராகவும் (Transcrlber), எழுந்தமைதியியல் அறிவு (Palaeo-graphic knowledge) கொண்டவராகவும், மொழியியல் சிந்தனை (Linguistic thought) உடையவராகவும், சிறந்த இலக்கண அறிஞராகவும் (Grammarian) சொல் வளம் (Copiousness of language) கைவரப் பெற்றவராகவும், திறனாய்வாளராகவும் (critic) இருக்கவேண்டும் என்று கொள்வது பதிப்புச் செம்மை கருதியேயாகும்.

சுவடி பெயர்த்தெழுதுவது என்பது எல்லோராலும் செய்யவியன்ற எளிய செயலன்று. அதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றவரும் மரபு வழிக் கற்றவருமாகிய சிலரால் மட்டுமே செய்ய வியலும். பிழையற்ற முறையில் எழுதப்படும் பெயர்ப்பே பதிப்புப்பணியின் 'சிக்கலைக் குறைக்கத் துணை செய்யும். அவ்வாறு செய்வதற்கு, முதற்கண் யாப்பியல் அறிவு மிக இன்றியமையாதது. யாப்பின் பல்வேறு நிலைகளையும் அறிந்தவராலேயே அந்நந்தக் கால இலக்கியங்களைப் பெயர்த்தெழுதிப் பதிப்பிக்கவியலும்.

பதிப்பிற்கு இன்றியமையாததான பெயர்த்தெழுதுதலும், ஒப்பு நோக்கலும் இலக்கண அறிவும் சொல்வளமும் கொண்ட பதிப்பாசிரியரால்தான் செய்தற்கியலும். சுவடியைப் படிக்கும்பொழுது ஏற்படுகிற பல்வேறு பிழைகளும் பாடவேறுபாடுகளும் பதிப்பிற்குப் பல்வேறு சிக்கல்களை உண்டாக்கக் கூடும். பெயர்த்தெழுதுவதிலும் படிப்பதிலும் உண்டாகிற குறைபாடுகளை டாக்டர் உ. வே. சா. அவர்கள் தம் நூல்களுள் பலவிடங்களிலும் சுட்டியுள்ளார். இது தமிழுலகிற்கு

மட்டும் உரியதன்று. கிரேக்கத்திலும், இந்நிலை இருந்தது என்பதை நம்மால் உணர முடிகின்றது. 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும்' என்ற சொற்றொடர் (phrase) தவறாகப் படிக்கப்பெற்றதன் விளைவாகும். கயிறு என்று பொருள் தரும் சொல்லை (kamilos) ஒட்டகம் என்று பொருள் தரும் சொல்லாகப் (kamelos) படித்ததன் விளைவே மேற்குறிப்பிட்ட சொற்றொடராகும். இச் சொற்கள் பாடவேறுபாட்டிற்குட்பட்டன என்பதைக் கிரேக்க ஆங்கில அகராதி தெளிவுபடுத்தியுள்ளது (Greek-English Dictionary, 1968).

இத்தகைய வேறுபாடுகள் தோன்றாதிருக்க வேண்டுமெனில் எழுத்தமைதியியல் (Palaeography) அறிவைப் பெற்றிருக்கவேண்டும். காலந்தோறும் இடந்தோறும் எழுத்துகளின் வடிவம் மாறும் என்பதைப் பதிப்பாசிரியர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பர் (மு. சண்முகம் பிள்ளை, 1984). குறில் நெடில் வேறுபாடுகளைச் சுட்டும் குறியீடுகள் காலத்திற்குக் காலம் சுவடிகளில் வேறுபட்டிருக்கும் என்பதையும் அவற்றின் வடிவ வளர்ச்சி நிலைகளையும் அறியும்பொழுது பாடவேறுபாடுகள் குறைவதோடு சுவடிகளின் காலநிலையைக் கணிப்பதற்கும் ஏதுவாகும்.

பெயர்த்தெழுதுங்காலும், அதன்பிறகும் நடைபெறும் பதிப்புப்பணிகள் திறம்பட நடைபெறுதற்கும் பதிப்பாசிரியரின் சொல்வளத்திறன் குறிக்கத்தக்க இடம் வகிக்கின்றது. நிரம்பிய சொற்களை அவர் அறிந்திருக்கவேண்டும். சான்றாக 'கொள' என்ற சொல்லைக் காண்போம். இதனைக் 'கொள' என்றும், 'கொள்' என்றும், 'கோள்' என்றும், 'கேரள' என்றும் படித்தற்கியலும். இவ்வாறு படித்துப் பொருண்மை காண்பதற்கு நிரம்பிய சொல் தொகுதிகள் (Vocabulary) மனத்துள் பெற்றிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தாலன்றி முன்னும் பின்னும் இயைய உச்சரித்துப் பல்வேறு பொருளைக் கண்டு உண்மைப் பொருளைத் தெளியமுடியாது.

வட்டார மொழிக்கூறுகளை ஒருவாறு அறிந்திருந்தால் இது எவ்விடத்தில் எழுதப்பட்ட சுவடியென்பதைத் தெரிந்து கொள்ளவியலும். சில பகுதிகளில் மட்டுமே வழக்கத்திலிருக்கும் வழக்குச்சொற்களை அறிந்து, அதற்குரிய பொருளை அளிக்கவும், இருவேறிடத்தில் வழக்கத்திலிருக்கும் சொற்களை அறிந்து அவற்றிற்கேற்பப் பொருளுரைக்கவும் அத்தகைய மொழியியல் அறிவு இன்றியமையாததாகும்.

பரந்துபட்ட நூற்புலமை பெற்றவராகப் பதிப்பாசிரியர் விளங்கவேண்டும், பதிப்பித்தற்கு எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கும் நடுவு நின்று வேறுபடுத்திக் காட்டுதற்குமுரிய திறனாய்வு உணர்வு, நூற்புலமை இருந்தாலொழிய சிறப்படையாது பண்டைய உரையாசிரியர்கள் அனைவரும் இத்தகு திறம் வாய்ந்தவர்களே. நூல்களுக்குத் தம் புலமை நலத்தால் உரைவகுத்து அவற்றை அவர்கள் வெளிக்கொணர்ந்து காட்டியமையும் ஒருவகைப் பதிப்புப் பணியாகும்.

இவை போன்ற பல்வேறு இன்றியமையாக் கூறுகளோடு பதிப்பாசிரியர் ஒரு சிறந்த மெய்ப்புத்திருத்துநராகவும் (Proof reader) திகழ வேண்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும். நூலின் சிறப்பிற்கு, அது பிழையின்றி வெளிவருவது அடிப்படைக் காரணமாகும். எனவே பிழைதிருத்தத்தில் பதிப்பாசிரியரின் முடிவே இறுதியானதாக அமையவேண்டுவதால் அப்பணி செம்மைபெறச் செய்யப்பெறுதல் வேண்டும். மெய்ப்புத்திருத்துநர் எப்படியிருக்க வேண்டும், திருத்துமுறை எப்படி அமையவேண்டும் என்பதைப் பல்வேறு நூல்கள் எடுத்தியம்புகின்றன. நூலின் வடிவம் தெரிந்தெடுத்தல் முதல், அதன் வண்ணம் தெளிவது வரையிலும் முழுக்கவனத்தையும் பதிப்பாசிரியர் செலுத்த வேண்டும்.

மேற்கூறப்பட்ட தொழில்சார், கல்விசார் பதிப்பாசிரியர்களின் செயற்பாடுகள் வெவ்வேறாக அமைந்திருப்பினும் அவற்றினுள்ளே காணப்படுகின்ற நெறிமுறைகளும் நுட்பங்களும் அனைவர்க்கும் பொதுவானவையாகவே அமைந்துள்ளன.

என்பு: எலும்பு என்பது எல்லோரும் அறிந்த சொல், இலக்கியங்களில் இச்சொல் என்பு என வழங்குகின்றது...

கன்னடத்தில் எலும்பை 'எலு' என்கிறார்கள். எலும்பின் ஆதி நிலையினை நாடும் பொழுது மலையாளம் வந்து உதவுகின்றது. எல் என்பது மலையாளத்தில் எலும்பைக் குறிக்கும். அதுவே கன்னடத்தில் 'எலு' என்றாயிற்று. தமிழில் விகுதி பெற்று 'என்பு' என்றும், எலும்பு என்றும் அமைந்தது.

(தமிழ் விருந்து, 96.)

சேக்கிழார் இசையியல்

டாக்டர் வீ. ப. கா. சுந்தரம்,
இசைக்கலைச் செல்வர்-பசுமலை, மதுரை

(சிலம்பு சுஉ, பரல்-கஉ, சசுகஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓசை ஒலி

''ஓசை ஒலி எலாம் ஆனாய் நீ'' என்று குறிப்பிடுங்கால்- இறைவன் ஒலியானவன், ஓசையானவன் என்று பொருள் படுகிறது. ஓசை வேறு; ஒலி வேறு. ஓசை என்பது ஒழுங்கு அளவு முதலிய கட்டுப்பாடு அற்று எழுவது. ஒலி என்பது ஒழுங்கு, கட்டுப்பாடு, அளவு தன்மை முதலியன பெற்று எழுவது. மலையில் பாறை உருள்வது - ஓசை, வீணையில் சுரங்கள் எழுவது - ஒலி; இரண்டும் தமிழ்ச் சொல்கள். இத்துணை நுண் பொருள் வேறுபாடுகள் இருப்பினும் காலப் போக்கில் மொழியில் வழக்கு இழந்துவிட்டன. ஓசையை ஒலியாகவும், ஒலியை ஓசையாகவும் கூறும் வழக்கம் பிற்காலத்தில் மலர்ந்துவிட்டது. வரவர நுண்பொருள் வேறுபாடு இல்லை.

உடுக்கை ஓசை என்றும் உடுக்கை ஒலி என்றும் சொல்லும் மரபு பண்டைய காலத்திலேயே தோன்றிவிட்டது.

உடுக்கை ஒலி எழும்போது - ஒலி எழுப்பும் வகையைக் கண்ணால் காணலும் காதால் கேட்டலும் ஆகிய இரண்டின் மூலமாய் அறிகின்றோம். சிலம்பு ஒலி சிலம்பின் உள்ளே இருந்து புறத்தே வருவது. உடுக்கை ஒலி புறத்தே எழுந்து புறத்தே விரிந்து செல்வது. சிவனாரின் கையில் உள்ளது உடுக்கை. இது ஏன் இத்துணை சிறப்புப் பெற்றுள்ளது? எவ்வாறு பிற இசைக் கருவிகளிலும் இது சிறந்தது?

1) உடுக்கை ஒலி மிகமிக விரைவானது. அதன் விரைவிற்கு ஈடான ஒலி கிடையாது என்றே கூறலாம்.

2) உடுக்கை ஒலி மிகச் சிறிய முயற்சியால் எழுவது; சிறிய முயற்சி அரிய விரைவு;

3) உடுக்கையே அனைத்து யதிகட்கும் அடிப்படையானது. யதி என்பது ஒலியிலேயே வரையும் இசை உருவம்;

அதாவது ஒலிக் கோலம். இந்த ஒலிக் கோலம் புல்லாங்குழல் போன்று நீண்ட வடிவம் உடைய ஒலிக் கோலம் ஒருவகை. மத்தளம் போன்ற நடு பெருத்து இருமருங்கிலும் சிறுத்துச் செல்லும் வடிவமாகிய ஒலிக் கோலம். நாகசுரம் போன்று தொடக்கம் சிறுத்து வரவரப் பெருத்துச் செல்லும் ஒலிக் கோலம்; தபேலா (தவலை) போன்று முதலின் அகன்று செல்லச்செல்லச் சிறுத்துச் செல்லும் ஒலிக் கோலம். இவ்வாறு ஒலிக் கோலம் பலவகைப்படும். இத்தனை வடிவங்களும் உடுக்கையினின்று பிறப்பனவே. உடுக்கையை நடுவில் முறித்துத் தலைமாற்றிப் பொருத்த மத்தள வடிவம் கிடைத்துவிடும். உடுக்கையை நடுவில் பிரித்து அமைக்க - தவலை (தபேலா) வடிவம்; மேலும் நாகசுர வடிவும் கிடைக்கும். எனவேதான் - உடுக்கை சிறப்பிடம் பெறுகிறது.

மேலும் தாளங்களின் வடிவம் யாவும் இந்த உடுக்கையின் வடிவத்துள்ளே அடங்கும்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தனுள் - ஓசைக்கு உணர்ச்சியூட்டும் தன்மை உண்டு; எனவே ஓசையானது இன்பம், துக்கம் முதலிய சுவையுடையது. குயில் ஓசை இன்பூட்டுவது; ஆந்தை ஓசை அச்சமூட்டுவது; நாய் ஊளை துன்பம் ஊட்டுவது; கழுதை கத்துதல் நகையூட்டுவது. ஓசையைக் காதுப் பொறியால் உணர முடியும்; எனவே ஓசை ஊறு உடையது. ஓசைக்கு நாற்றம் இல்லை; ஓசைக்குள் ஒளி உண்டு; வெப்பம் உண்டு. ஓசைக்குத் தோற்றம் உண்டு; மறைவும் உண்டு. இரு கற்களைப் பலமாய்த் தட்டுவதால் ஓசையுடன் ஒளி உண்டாவது காண்க.

ஒலிக்கு (1) நீளம் (duration), (2) தாரம் (pitch), (3) செறிவு (Density), (4) பருமை, (Loudness) என்று நான்கு தன்மைகள் உண்டு. (1) வெண்கலத்தில் ஓசையானது நீளம் பெறும்; கல்லின் ஓசை ''சட்'' என நின்றுவிடும். (2) சட்சம் என்பது தாழ்ந்த சுருதி அளவுடையது. அதனிலும் உயர்ந்த சுருதி அளவுடையது—பஞ்சமம். (3) ஒரு கட்டை சுருதிக்கு உள்ளவையாகிய குழலின் ஒலியானது வீணை ஒலியினும் செறிவும் கனமும் உடையது. (4) பெரிய ஒலியும் உண்டு. நுண்ணிய ஒலியும் உண்டு;

நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐந்தும் குழல் ஒலியிலே அறியலாகும். மூங்கிலே நிலம் அல்லது தளம் எனலாம்: குழலில் சற்று ஈரப்பசை வேண்டும்; வாயின் எச்சிலைக்

குழலின் வாய்த்துளையில் தடவிக்கொள்ளுதலும், ஈரக் கையால் குழல் இசைப்போர் குழலைத் தடவிக்கொள்வதும் உண்டு. வாய்க்காற்று – குழலில் உராய்ந்து வெப்பம் ஊட்டுவதால் ஒலி தோன்றுகிறது. ஒளியின் ஒரு கூறு வெப்பம்; (4) காற்று என்பது ஒலியை உண்டாக்கும் பொழுது அதற்கு வளி என்று பெயர். ஒலிக் காற்று என்பது வளி. (Air-wind) (5) வெற்றிடமே - வான்; குழலில் உள்ள வெற்றிடமே வெளி எனப்படும்;

''நிலம்! நீர் தீ வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கமே ஒலி எனலாம்.''

இவை ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் என்று மரபாகக் கூறி வருகிறோம்,

அசைவே ஒலியாகும்:- உடுக்கை ஒலியானது கையின் அசைவு மூலம் ஆகும் படைப்பு; அஞ்சேல் என அபயம் கொடுக்கும் திருக்கையின் அசைவுமூலம் ஆவது, காப்பு; அனல் ஏந்திய கையின் அசைவுமூலம் ஆவது அழித்தல்; முயலகன் மேல் ஊன்றிய திருவடியின் அசைவுமூலம் ஆவது மறைத்தல்; தூக்கிய திருவடியின் அசைவுமூலம் ஆவது அருளல். இவை களை அறிவிக்கும் பாடல் வருமாறு:

''தோற்றம் துடியதனில் தோயும்; திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.''

என்னும் உண்மை விளக்க நூலின் வெண்பா (35) நன்கு ஒலியின் பயன்களை அறிவிக்கின்றது. இறைவனின் உடுக்கையினின்றும் எழும் ஒலியானது உலகம் யாவையும் படைத்தது. ''**தோற்றம் துடியதிலே தோயும்**'' என்று கூறப்பட்டுள்ளது. இதனாலும் துடியின் தனிப்பெரும் மாட்சிமையை அறியலாகும். அனைத்துத் தோற்றமும் துடிஒலியிலே ஆனவை.

''**ஓசைக் கேள்வியர்**'':- இது சிவபெருமானுக்குரிய பல் பெயருள் ஒன்று; ஓசை என்பதைக் கேட்டு இன்புறுபவர் என்று பொருள்படுவது. மேலும் ''இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நல்கி'' என்கிறது தேவாரம் (7 : 88 : 5). ''மேலும் ஓசையும் ஈசனும் ஒக்கும்'' என்பது

வரவேற்று உயர்ந்த இருக்கையில் அமர்த்தி உணவுப் பண்டங்களையும் பழங்களையும் தட்டில் வைக்கிறான். அத் தட்டில் தங்கக்காசுகளும் இட்டு வைக்கிறான். தின்பண்டங் களுடன் தங்கக் காசுகளை ஏன் வைத்தீர்கள் என்று அலெஃசாந்தர் கேட்டபோது, 'தாங்கள் இந்தியாவின் மீது படையெடுத்ததன் நோக்கம் பணம் திரட்டிச் செல்வதற்காக என்று கேள்விப்பட்டேன். அதற்காகத்தான் தங்கக்காசு வைத்தேன்' என்று கூறினான்.

'நான் பொன்னும் பொருளுக்குமாக வரவில்லை. வெற்றிக் கொடி நாட்டி, உங்கள் நாட்டின் நாகரிகப் பண்பாட்டுச் செழுமைகளைக் காணவே வந்தேன். உங்களைச் சுற்றிக் குறை வேண்டி நிற்கிறார்களே இவர்கள் யார்? எதற்காக இங்கு உங்கள் முன் கூடியிருக்கிறார்கள்' என்று ஊர்த் தலைவனை அலெஃசாந்தர் கேட்டான்.

அவர்கள் இங்குக் கூடியிருக்கும் காரணத்தை உங்கள் முன்னிலையிலே விளக்குகிறேன் பாருங்கள் என்று விடை யிறுத்த ஊர்த்தலைவன் வழக்குக்கொணர்ந்த இரு முதியவர் களை உசாவுகிறான்.

முதல் முதியவன் தன் நிலத்தை இரண்டாம் முதிய வருக்கு விற்றுவிட்டதாகவும் அதில் கிடைத்த புதையல் பொற்காசுகளைத் தான் எடுத்துக்கொள்ளும் உரிமை தனக் கில்லாததால் மறுத்துவிட்டதாகவும் கூறினான். இரண்டாம் முதியவன் தான் நிலத்தை மட்டும்தான் வாங்கியதாகவும் அதில் புதையலைப் புதைத்து வைத்தவர்கள் முதல் முதிய வரின் முன்னோர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றும் அதனால் மற்றவர்களின் சொத்து தனக்கு வேண்டாம் என்றும் கூறினான்.

உடனே ஊர்த்தலைவன் முதல் முதியவர்க்குத் திருமண வயதில் ஒரு மகனும் இரண்டாம் முதியவர்க்குத் திருமண வயதில் ஒரு மகளும் இருப்பதறிந்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துப் புதையல் பொற்காசுகளை அவர்களிடம் ஒப்படைத்துவிடுமாறு தீர்ப்பளிக்கிறார்.

மற்றவர் சொத்துக்கு ஆசைப்படாத இந்திய மக்களின் நேர்மையையும், ஊர்த்தலைவரின் முறை வழங்கும் அறிவு அட்பத்தையும் கண்டு அலெஃசாந்தர் வியந்தான் என்று நுந்தக் கதை கூறுகிறது. கரிகாலனே இவ்வாறு முறை வழங்கியவன். சோழன் கதை கைபர் போலன் கணவாய் வரை போனது எவ்வாறு என்று ஆராய்தல் வேண்டும்.

சிறுவர் பாடல்களில் ஒருகுடம் தண்ணீர் ஊற்றி......... போன்ற பல பாடல்களின் மூணுகுளம் வெட்டி .... மொழியில் கருத்து மாறாமல் வரி பிசகாமல் மராத்தி உள்ளன. திருவாசகப் பொற் குழந்தைப் பாடல்களாக சுண்ணப் பாடல்கள் குச்சர மாநிலத்து நாட்டுப்பாடல்களாக நடிக்கப்படுகின்றன. தோள் துளங்கை பஞ்சாபிலும் தமூஉத் துளங்கை ஆந்திரத்திலும் நாட்டுப்புற நடனங்களாக உள்ளன. ஆண்டுதோறும் முதன்முதலில் உழவர்கள் வடகிழக்கில் ஏர் உழத் தொடங்குவதும் நாற்று நடத் தொடங்குவதும் அறுவடை செய்யத் தொடங்குவதும் அசாம் மாநிலம் வரை பரவியுள்ளது. என் நெஞ்சம் திறக்குநர் நிற்காண்குவரே என்னும் புறநானூற்று வரி பிராகிருதப் பாடலில் அப்படியே உள்ளது. தென்னாட்டுச் சிறுகதைகள் பற்பல வடநாட்டுச் சிறுகதைகள் ஆகிவிட்டன. பல்கலைக் கழகங்களில் முனைவர் பட்டத்துக்கு இவற்றை ஆய்வுத் தலைப்புகளாகத் தரின் நலம்பயக்கும்.

சென்னையில் திருக்குறள் மாநாடு

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 1988 திசம்பர் 3. 4 ஆகிய இரு நாட்கள் திருக்குறள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இம் மாநாட்டு ஏற்பாடுகளைத் திருக்குறள் நெறி பரப்பு மைய இயக்குநர் திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் செவ்வனே செய்தார்கள். முதல் நாள் நிகழ்ச்சி, திருமுருக கிருபானந்த வாரியார் தொடங்கி வைக்க, புதுவை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. துணைவேந்த ரவர்கள் திருக்குறள் தேசிய நூலாக ஏற்கப்படவேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார்.

இரண்டாம் நாள் விழாவில்—திருக்குறள் சிந்தனையில் ஈடுபட்டு உரைகள் பல வெளியிட்டும் உள்ள பன்மொழிப் புலவர், டாக்டர் கா. அப்பாத்துரையார், திருமிகு இராஜு செட்டியார், கல்லை தே. கண்ணன் ஆகிய மூவர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சை. வே. சிட்டிபாபு அவர்கள் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கிப் பாராட்டினார்கள். இறுதியாகத் திருக் குறளார் வீ. முனுசாமி அவர்கள் திருக்குறள் தேசிய நூலாக ஆக்கப்பட வேண்டும் என்றும் மாவட்டங்கள்தோறும் திருக் குறள் நெறிபரப்பு மையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறி விழாவை நிறைவு செய்தார்.

திருமந்திரம் (771). சம்பந்தருக்குக் காசு நல்கி, தேசுமிகும் இயல் இசைத் தமிழைச் சிவன் கேட்டு மகிழ்கின்றான்.

ஒலி வழிபாடு :- ஒளியைக் கண்டு வழிபடுவது ஒருமுறை; ஒலியைக் கேட்டு வழிபடுவது அதனினும் உன்னத முறை. கண்ணை மூடிய சிந்தையில் சிவனது நடன ஒலி கேட்டல், சிவனுடன் உரையாடல்—முதலிய நிலைகள் சிவஞானச் சித்தர்கள் பால் உண்டு. நாயனமார்களுள், இருவர் ஒலி வழிபாட்டினர். சேரமான் பெருமாள் நாயனார் - சிவனாரின் செவ்விய திவ்விய சிலம்பொலியை நாளும் கேட்டு மகிழ்ந்து உருகிப் பணியும் பேறு பெற்றிருந்தார். இது பழுத்து முதிர்ந்த தவப்பேறு, இனி ஆனாய நாயனார் திருவைந் தெழுத்தொலியைக் குழல் ஒலிகள் ஐந்துள் வைத்து வழிபாடு செய்தார். நடனஒலி கேட்டுத் தொழுதது, சிவனருளால் சிவனே வந்து நல்குவது. ஐந்து சுரம் இசைத்துத் தொழுவது - தன்னை மறந்து தானே புரியும் சிந்தனை வழிபாடு.

பத்திமையோடு இசைக் கருவி இசைத்தல் :-

''அன்பூறி மிசை பொங்கும் அமுதஇசைக் குழலொலியால்
..............எழுத்தைந்தும் வழுத்தி'' —என்கிறார் சேக்கிழார்; ஐந்து எழுத்துகள் :—ந, ம, சி, வ, ய.

''வேதம் நான்கிலும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே''

என்றார் சம்பந்தர். இருக்கு, யசுர், சாம, அதர்வ வேதம் நான்கிலே - ''நமசிவாய'' என்னும் பதம் இல்லை என் பார்கள். அகம் பிரஃமா சுமி, தத்துவமசி, பிரமம் - முதலிய தத்துவங்கள் உண்டு என்பார்கள், இனி ''நமசிவய'' என்பது மேலே கூறியபடி இறைவனின் திருப்பெயர் எனக் கொள்ளப்பட்டது. இது சம்பந்தர் விளக்கம். மேலும் அந்தப் பதிகம் ''நமசிவய'' என்பதற்குப் பல விளக்கம் கூறியுள்ளது.

(தொடரும்)

கரிகாலனும் அலெ∴சாந்தரும்

பேராசிரியர் இரா. மதிவாணன்

கரிகாலனும் அலெஃசாந்தரும் என்னும் தலைப்பைப் பார்த்தவுடன் பலருக்கும் வியப்பால் புருவம் உயரும். காகுவாவுக்கும் கரீம் சாயபுக்கும் முடிச்சுப் போட்டுப் பேசுவது போலிருக்கும். வரலாற்றில் சுவையான நிகழ்ச்சிகள் பல காற்றடிக்கும் திசையில் பறந்துபோய் வேறு ஒருவருடைய வாழ்நாளில் நடந்ததாகத் திரிக்கப்பட்டு விடுவதையே இந்தப் புதுமைத் தலைப்பு சுட்டிக் காட்டுகிறது. புதிரை விடுவிப்ப தல்ல நோக்கம், புதிருக்கும் புதிரான உண்மைகளை அலசு வதே ஆய்வாளரின் கடமை.

தட்சிண பாரத இந்தி பிரசார சபை எனப்படும் தென்னக இந்தி பரப்பு மன்றத்தினர் வெளியிட்டுள்ள முதலாம் கதைத் தொகுதி (ககானி குசும்-Kahani kusum) நூலில் 14ஆம் கதை யாக மெய்யான முறை வழங்கல் (சச்சா நியாய) என்னும் கதை சேர்க்கப்பட்டிருக்கிறது.

''உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சைக்
கல்லாமல் பாகம் படும்.''

என்னும் பாடலில் கரிகாலனின் முறை வழங்கும் நுண்ணறிவுத் திறம் பாராட்டப்பட்டுள்ளது. கரிகாலன் முறை வழங்கிய வரலாறு பண்டுதொட்டுத் தமிழ்நாட்டில் கதையாக வழங்கி வருகிறது.

பறவைகள் நாடுவிட்டு நாடு வலசை போவதுபோல சுவையான வாழ்க்கை நிகழ்ச்சிகள் நாடெங்கும் மொழி வரம்புகளைத் தாண்டிப் பரந்துவிடுகின்றன. கரிகாலனைப் பற்றிய இதே நிகழ்ச்சி வடநாட்டில் அலெஃசாந்தர் படை யெடுப்பின்போது ஒரு சிற்றூரில் நிகழ்ந்ததாக அந்த இந்திக் கதையில் கூறப்பட்டுள்ளது. அலெஃசாந்தர் வடநாட்டுச் சிற்றூர்ப்புறத்தில் படைகளுடன் தங்கியிருக்கிறான். ஒரு நாள் மாலையில் அந்தச் சிற்றூர்க்குள் வேடிக்கை பார்ப்பவன் போல் நுழைகிறான். அவ்வூர்த்தலைவன் அலெஃசாந்தரை

செய்திகள்

பெரியபுராண விரிவுரை நிறைவு விழா

சென்னை, ஆதம்பாக்கம் எல்.ஐ.ஜி. காலனியில் உள்ள சுந்தர விநாயகர் ஆலயத்தில் தெய்விக இலக்கிய மன்றச் சார்பில்' 10-10-88 முதல் 15-10-88 வரை பெரியபுராண விரிவுரை நிகழ்ந்தது. இதனைப் பாராட்டு முகத்தான் அன்று இரவு-7 மணிக்குத் திருமிகு. டாக்டர் ''சொல்லின் செல்வர்'' அவ்வை. நடராசன் (செயலர்-பண்பாட்டுத்துறை, தமிழக அரசு) அவர்கள், தலைமையில் விரிவுரையாற்றிய திருமிகு. பெரும்புலவர். இர. திருஞானசம்பந்தர் அவர்களைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். மற்றும், திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள்பிள்ளை, (செயலர்—சட்டப்பேரவை, தமிழக அரசு) அவர்களும், திரு. ஜே. ஜி. கிருஷ்ணமூர்த்தி, (இணைச்செயலர்—நகத் துறை, தமிழக அரசு) அவர்களும், திரு. த. இராமலிங்கம், தலைமையாசிரியர் (ஜி. எம். டி. டி. வி.) அவர்களும், இரயில்வே முத்தமிழ் மன்றச் சார்பில், திரு. புலவர் என். இ. இராமலிங்கம் அவர்களும், புலவர் மன்றச் சார்பில் புலவர் சீனி. விசயராகவன் அவர்களும், புலவர் சுந்தரேசன் அவர்களும், மற்றும் பலரும் பாராட்டிப் பேசினர். திரு. புலவர் இராம. வேங்கடேசன் அவர்கள் தெய்வத்தமிழ் இசை பாடினார். பெரும்புலவரின் ஏற் புரைக்குப் பின் விழா இனிதே நிறைவுற்றது.

முத்தமிழ்க் காவலர் தொண்ணூறு!

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

'முத்தமிழ்க் காவலர்' தொண்ணூறு
முத்தமிழ் நாட்டின் பெரும்பேறு
வித்தகர் இலக்கிய வரலாறு
புத்துணர் ஊட்டும் கனிச் சாறு.

பேச்சில் ஆயிரம் பொருளிருக்கும்
பெருமிதத் தோற்றப் பொலிவிருக்கும்
மூச்சில் செந்தமிழ் உணர்விருக்கும்
முதுபெரும் அறிவுக் கனல்பரக்கும்.

திருச்சி விசுவ நாதமெனும்
தென்னக அரசியல் மேதையவர்
பொருட்சுவை ததும்பும் படைப்பாளர்
புன்னகை வாழ்க நூறாண்டு!

மதிப்புரை

கால வெளி அழைக்கிறது

[ஆசிரியர்: ய. மணிகண்டன், பக். 32, வெளியீடு: மூவேந்தர் வெளியீட்டகம், 8, காசி விசுவநாதர் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.]

''தேன்தட்டுக் காரியே! செந்தமிழே! என்பாட்டில் மானுடத்தைக் காப்பதற்கு வா'' என்று தமிழுக்கு வரவேற் பளிக்கும் இப்பாத் தொகுதி,

'ஞால நதிக் கரை கடந்து நானெங்கோ செல்வதற்குக் கால வெளி அழைக்கிறது!—என் கண்ணிமையும் துடிக்கிறது.' என்ற புரட்சி அறை கூவலுடன் நிறைவு பெறுகின்றது.

உழைப்பாளரின் சீற்றத்தை,

''வெந்நீராய் இருந்தால் விரைவில் ஆறிவிடும்!
செந்தீயைச் சிந்துகிற சூரியனா ஆறிவிடும்! (பக். 12)

என்று குறிப்பிடுகின்றார். பாவாணர் பற்றிப் பாடுகையில்,

மொழியின் உயர்வை உரைத்தவர்—தமிழ்
முன்னேற்றம் எண்ணியே உழைத்தவர்!
அழியாத் தொண்டே அவர் தொண்டு—அட
அவர்போல் உலகினில் யாருண்டு! (பக். 22.)

என்கின்றார்.

இங்ஙனம், வரிக்கு வரி, அழுத்தந்திருத்தமாய்ப் பட்டுக் கத்திரித்தாற் போல் இக் கவிஞர் கூறும் கருத்துகள் மிக மிக அருமை!

கல்விச் சிந்தனைகள்

[ஆசிரியர்: டாக்டர் வ. பெருமாள், பக். 95, விலை ரூ. 9 00 வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளை வீதி, வ.உ.சி. நகர், வேலூர்-1;]

பன்னூல் ஆசிரியர் டாக்டர் வ. பெருமான் அவர்களின் அரிய படைப்பு 'கல்விச் சிந்தனைகள்'. தங்க வயலில் பல் லாண்டு பேராசிரியராகப் பணியாற்றியதின் பட்டறிவுப் புதையல் இந் நூல்!

மொழியின் வரலாறு, அறிவு, மொழியாக்கக் கலை; மாணவன், கட்டுரை இலக்கணம் கற்கும் முறையும் வகையும் போன்ற தலைப்புகளில் தமது நுண்மாண் நுழைபுலத்தை நிறுவியுள்ளார்.

தெளிந்த நடை, அழகிய உவமைகள், தகுந்த மேற்கோள்கள் நூலுக்கு அணி சேர்க்கின்றன. 'மொழி பெயர்ப்பு' பற்றிக் கூறும்பொழுது, 'நீண்ட வாக்கியத்தை இரண்டு அல்லது மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து மொழி பெயர்த்தால் எளிமையாக இருக்கும். இது, பெரிய அப்பளத்தைத் துண்டு துண்டாக உடைத்து எளிமையாகத் தின்பதற்கு நிகராகும்' (பக். 24.) என்பது அருமை.

கல்லூரிகள்—பள்ளிகளில் பாட நூலாக ஏற்கும் தகுதியுடையது இந்நூல்.

—வேலூர் ம. நாராயணன்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
திரு. K. வேணுகோபால் அவர்கள். சென்னை-14	25 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
மு. சதாசிவம் (வாசவி கல்லூரி, ஈரோடு)	10 00
திரு. ஏ. தெய்வசிகாமணி, அரைப்பாக்கம், சென்னை—96 (மகன் செல்வன் டி. ரவி பி.இ. எம்.ஐ.இ. திருமண அன்பளிப்பு)	101 00

தென்னிந்திய தமிழ்ச்சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம். ஏ., பி. லிப்.

191720

கழக வெளியீடுகள்

பேராசிரியர் கா. சு. பிள்ளை, நூல்கள் மறுபதிப்பு

திருக்குறள் பொழிப்புரை	20	00
அப்பர் சுவாமிகள் வரலாறு	12	00
மணிவாசகப் பெருமான் வரலாறு	10	00
சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு	14	00
சிவஞான முனிவர் வரலாறு	12	00
குமரகுருபர அடிகள் வரலாறு	10	00
தாயுமானவர் வரலாறு	16	00
பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்	5	00
திருஞானசம்பந்தர் வரலாறு	அச்சில்	
மெய்கண்டாரும் சிவஞானபோதமும்	15	00
தமிழர் சமயம்	12	00
குமரகுருபரர் காட்டிய வழி	6	00
சைவசித்தாந்த சந்தானாசாரியர்களும் அவர்களின் அருள் நூல்களும்	6	50

கழக நிலையங்களில் கிடைக்கும் பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

தமிழ் இதழியல் வரலாறு—மா. சு. சம்பந்தன்	27	00
உயிர்க்காதல்—கு. இராஜேந்திரன்	25	00
என் அண்ணாமலை நகர் வாழ்க்கை—பாவாணர்	5	00
சுவடழிந்த கோயில்கள்—டாக்டர் இரா. கலைக்கோவன்	18	00
தீபங்கள் தீப்பந்தங்கள்—வைரமுத்துதாசன்	9	00
பாரதிதாசன் வாணிதாசன் கவிதைகளில் இயற்கைப்புனைவு —டாக்டர் வே. காத்தையன்	40	00
இராமாயணம் - உத்தரகாண்டம்-I தெளிவுரை —ஜெ. ஸ்ரீ சந்திரன்	40	00
இராமாயணம் - உத்தரகாண்டம்-II தெளிவுரை —ஜெ. ஸ்ரீ சந்திரன்	40	00
சரசுவதி அந்தாதி—புலவர் அ. மாணிக்கம்	4	00
சடகோபர் அந்தாதி—பூவண்ணன்	9	00
காலவெளி அழைக்கிறது—ய. மணிகண்டன்	3	00
கட்டுரைக் களஞ்சியம்—கம்பன் அடிப்பொடி சா. கணேசன்	12	00
குறள் குறள் குறள்—சு. சண்முக சுந்தரம்	10	00
முதல் மின்னல்—கவிஞர் மணி	10	00
காற்றுவெளிச்சிறைச் சாலை—டீயென்னே	8	00
திப்புகல்தான்—சுந்தரபாண்டியன்	12	00
மக்கட்பெயர் ஆய்வு—டாக்டர் சு. சக்திவேல்	12	00

Asian Educational Services

(C-2-15, SDA. New Delhi-110016.)

Branch : No. 5, Sripuram First Street,
Royapettah, Madras-600 014.
Phone No. 865040

Castes and Tribes of Southern India in VII Volumes (Set) By Edgar Thurston & K. Rangachari		1195	00
Memorandum on the Progress of the Madras Presidency during the last 40 years of British Administration By Srinivasa Raghava Iyengar		295	00
Great Temples of India, Ceylon & Burma		120	00
The Tamilian Antiquary in 11 Volumes By Savariroyan		660	00
A Classified Collection of Tamil Proverbs By Herman Jenson	P. B	45	00
	H. B	135	00
Maharastra Shabda Kosha in VII Volumes—By Dantta Karvee		1800	00
Mannual of the Administration of the Madras Presidency in 3 Volumes Set—By C. D. Maclean		2085	00

Books can be had of :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY LIMITED.
153/154 T.T.K Saalai, Madras - 18

Branches :

79, Prakasam Saalai (Broadway), Madras-108
Tirunelvelli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1 Trichirappalli-2.
Salem-1.

அப்பர் அச்சகம், சென்னை-108.